தென்மொழி



உற்றதமிழ்த் தாய்நாட்டை மீட்போம் இங்கே!

முள்மரத்தை வெட்டவெட்ட தழைப்ப தைப்போல்-
முரடர்களின் இந்திமொழி மேலும் மேலும்
உள்நுழைந்து நடுக்கூடம், சாக்குக் கூடம்,
ஒய்வறை,உள் ளறை,சமையல் அறைக்குள் எல்லாம்
கள்ளநகை இதழ்விரித்து நடைநடந்து
காலூன்றி மெல்லமர்ந்து படுக்கை சாய்ந்து,
உள்ளமனை விலைபேசும் உலுத்தனைப் போல்
உரிமையினைப் பறிபோக்கும் நிலைகண் டீரோ?

கண்டுங்கா ணாததுபோல் கவலை யின்றிக்
கட்சிக்குள், இனத்துக்குள் குத்து வெட்டுச்
சண்டைகளும், மடிவிரித்துப் பொறுக்கித் தின்னும்
சாடுவிடும் பேச்சுகளும் குறைய வில்லை!
துண்டுடுத்துத் தோள்நிறைக்கும் மாலை போட்டுத்
தோழருடன் ஊர்தோறும் உலாப்போ கின்றோம்!
மண்டையடி அடிக்கின்றான் வடவன், இங்கே!
மானத்தை விலைபோக்கி வாழ்கின்றோம், நாம்!

மாநாடு, தீர்மானம் வழக்கம் போல!
மாளாத கிளிப்பேச்சு! மக்கள் எல்லாம்
பூநாடும் தேனீப்போல் கூடும் கூட்டம்!
புல்லரித்துப் போகின்றோம்! அடடா! வெட்கம்!
நாநாடும் அடுக்குமொழி அழகுக் கிந்தி
நடுநடுங்கி யா,போகும்? எழடா, தம்பி!
ஒநாய்கள் கூட்டத்தை ஒடுக்க வேண்டும்;
உற்றதமிழ்த் தாய்நாட்டை மீட்போம் இங்கே!

சுவடி 21

ஓலை : 5

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை:
1-25 உருப

நமக்கு வந்த மடல்கள்.

0: 1060 : பெருமதிப்பிற்குரிய 'தென்மொழி' ஆசிரியர் பாவலரேறு அய்யா அவர்களுக்கு என்னுடைய உளமார்ந்த நன்றி கலந்த வணக்கம்.

தாங்கள் சென்ற இதழில் கலைஞர்க்கு விடுத்த வேண்டுகோள் சரியான வேண்டுகோள் என்றாலும், அதில் சிறிய மாறுதல் தேவை. கலைஞர் அவர்கள் அரசியலைத் துறந்து, தனித்தமிழகம் கேட்க வேண்டும். அதைக் கேட்பதற்காகவேனும் அவர் அரசியலில் இருக்கவேண்டும். தி.மு.க. இம்முறை தோற்றுவிட்டது என்றாலும் அதனை எளிதாக மற்ற கட்சிகள் நினைக்க முடியாது; நினைக்கவில்லை. இன்றும் தமிழகத்திற்கு ஒரு விடிவுக்காலம் உண்டு என்றால் அது தி.மு.க. செய்த ஒரு செயலாகத்தான் கருதப்படும் அதற்காக உ.த.மு.க.வை நான் இழிவுபடுத்தவில்லை. உ.த.மு.க.விற்குக் கலைஞர் தோள் கொடுப்பார்; ஆனால் அதற்காக அவர் அரசியல் துறக்கவேண்டிய தேவையில்லை என்பது என் சொந்தக் கருத்து. கலைஞர் நினைத்தால் இன்றே தனித்தமிழகம் பெற்றிட முடியும். கலைஞர் துணை என்றும் நமக்குத் தேவை. திராவிட மரபையே அழிக்க நினைத்துக்கொண்டிருக்கின்ற அ.இ. அ.தி.மு.க. போன்ற கட்சிகளும், தந்நலக்காரர் சிலரும் இருக்கின்ற வரை தனித்தமிழகம் கிடைக்கத் தடைக்கல்லாக இருப்பார்கள் என்று நான் அஞ்சுகிறேன்.

காரணம் அ.இ.தி.மு.க.வில் திராவிட மரபின் அடித்தளம் பற்றிச் சிறிதும் தெரியாத ஒரு சிலர், திராவிடம் பற்றிப் பேசி வருகின்றதை நினைத்தால், திராவிடப் பண்பாடே அழிந்துவிடும் என்ற அச்சம் எழச் செய்கிறது. மக்கள் மனம் மாறும் என்று நினைத்தேன். ஆனால் அது மாறும் வாய்ப்பே இல்லை என்கின்ற அளவுக்குச் செத்து விட்டது. மக்கள் தங்கள் பிள்ளைகள் படிக்காவிட்டாலும் தாழ்வில்லை; சாரவுணவு உண்டால் சரி என்று நினைக்கத் தொடங்கி விட்டனர். நினைத்தால் மனக்குமுறலை அடக்க முடியவில்லை. என் செய்ய? ஆட்சி அவர்கள் கையில்! நாம் மனத்தில் குமுறத்தான் முடியுமே தவிர வேறென்ன செய்ய முடியும்? உரிமை நாள் என்னும் போர்வையில் ஆகத்து-15, மற்றும் அக்டோபர்-2 ஆகிய நாள்களில் விடுமுறை கிடைத்ததுதான் ஊதியம்; மற்றொன்றுமில்லை. அதற்காகவேனும் நாம் தனித்தமிழகம் பெற்றே தீரவேண்டும். தனித்தமிழகம்தான் நம் ஒவ்வொருவரின் உள்ளத்துடிப்பாக இருக்கவேண்டும். உலக அரங்கில் தமிழன் முன்னணியில் இருக்கிறான், ஆனால் அவன் தாயகத்தில் பின்னணியில் இருக்கிறான். அதற்காகவே தங்களைப்போன்றோர் செய்கின்ற முயற்சி என்றுதான் இந்தத் தமிழகத்திற்கு விளங்குமோ? எவ்வாறேனும் தனித்தமிழகம் பெற்றே தீரவேண்டும்.

அன்புத்தொண்டன் —ந. உலகநாதன்-செ. புதுப்பாளையம்



திருவள்ளுவர்

Scanned with CamScanner



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

புரப்பாளர்கள் : தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி, ப. துரையரசன் தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன் தென்மொழி எசு. ஆர். பிரான்சிசு, தென்மொழி கா. இளமுருகன்

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி:21] தி.பி.௨௦௧௫ கும்பம் [பெப்-மார்ச்சு-85] [ஓலை 5

இந்தியைத் தடுக்க முடிந்ததா, நம்மால்?

செருக்குப் பிடித்தவர்கள் நாம்! மண்டைக் கொழுப்பு உருகி, நம் கண்களை மறைக்கின்றது! நமக்குள் உள்ள பொறாமைப் புகைச்சல்கள் இன்னுந் தீரவில்லை. உள்ளத்தின் நமைச்சல்கள் நாளுக்கு நாள் மிகுந்து கொண்டே வருகின்றன. தீட்டிய கத்தியை நம் அண்ணன் தம்பிகளின் முதுகிலும், மார்பிலுமே செருகிக் கூர் பார்க்கின்றோம், நாம்! ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்க மறுக்கின்றோம். நம்மில் யார் தாழ்ந்தவர், உயர்ந்தவர் என்று அளந்து பார்த்துவிடத் துடிக்கும்

வெறித்தனம் இன்னும் நமக்குப் போகவில்லை. நமக்குள் பல நூற்றுக் கணக்கான சிக்கல்கள்! ஆளுக்கொரு சிக்கலாய் அவிழ்த்துப் பார்த்துவிட முனைகின்றோம், நாம்! நமக்குள்ள பொதுச்சிக்கல்கள் எல்லாவற்றையும் ஒரேயடியாகத் தீர்த்துக்கட்டும், ஓர் அடிப்படைச் சிக்கலை, அனைவரும் பார்த்தும் பாராததுபோல், கேட்டும் கேட்காதது போல், முகத்தில் சீலைத் துணியைப் போட்டு மறைத்துக்கொண்டு திரிகின்றோம். ஒருவர் வடக்கே பார்த்தால், மற்றவர் கிழக்கே பார்க்கின்றோம். ஒருவர் கிழக்கே போனால், நாம் மேற்கே போகின்றோம்! நமக்குள் ஒற்றுமை இன்னும் கால் கொள்ளவில்லை. ஒருவரை ஒருவர் தின்று தீர்த்துவிட நினைக்கின்றோம். ஒருவருக்கொருவர் நாடி நரம்புகளை அறுத்துக்கொள்ள, குரல் வளைகளை நெறித்துக்கொள்ள, வரிந்து கட்டிக்கொண்டு அலைகிறோம்.

நம்மில் புதுச்சிந்தனைகளும் இன்னும் தோன்றவில்லை. நேற்றுப் பேசியதையே இன்றும் பேசித் திரிகின்றோம். ஆட்டிய மாவையே ஆட்டுகிறோம். உண்டதையே கக்கி உண்கிறோம். நம் தலைகளை நாமே பிய்த்துக்கொண்டதால், நம் தலைகள் சொட்டையாய்ப் போனதை நாம் இன்னும் உணரவில்லை: நம் கைகளில் யார் கழுத்தையோ நெறிப்பதற்காக உகிர்களை வளர்த்துக்கொண்டு வருகிறோம். நம் எதிரியை நாம் அடையாளம் காண முடியவில்லை. நம்மை நாமே அளவுக்கு மீறிப் பாராட்டிப் பறைசாற்றிக்கொண்டு திரிகின்றோம். நம் எழுத்துகள் நமக்கு வயிரக் கற்களாய் மின்னுகின்றன. நம் பேச்சுகள் நமக்குக் கிண்கிணி 'ஒலிகளாய்க் கேட்கின்றன. ஆ! நாம் எவ்வளவு வளர்ந்து விட்டோம் என்று தலை தெறிக்க ஆட்டுகின்றோம்.

வாய்விட்டுச் சிரித்துக்கொள்ள நம்மால் முடியவில்லை. தொண்டைக்குழியை நம் அகங்காரக் கொழுப்பு அடைக்கிறது. நம் நெஞ்சாங் குலையின் ஒவ்வொரு துடிப்பிலும் நம்மை நாமே புகழ்ந்து பாடிக்கொள்ளும் தாள இசை கேட்கிறது. நாம் நமக்காகவே என்னும் நம் நெஞ்சத்தின் கள்ளப் பண், நம் பசப்புப் பேச்சுகளால், இசை மாறிக்கேட்கிறது! நாம் யாருக்காகவோ வாழ்வதாகப் போலிச் சிரிப்புச் சிரிக்கிறோம்! தோள்களை நன்றாக நடிக்க வைத்து ஆட்டுகிறோம்!

நாம் கோடிக் கோடியாய்ச் சேர்த்து வைத்திருக்கும் கள்ளப் பணம், நம் பெட்டியில் யாருக்காகவோ காத்திருக்கின்றது. அதைக்கொண்டு அழியாத புகழை விலைக்கு வாங்கிவிடப் பேரம் பேசுகிறோம். நமக்கு முன்னவர்களின் சிலைகளைத் திறந்து, அவர்களின் காலடிகளில் நம் பெயர்களை எழுதிவிடத் துடிக்கின்றோம்! அவர்களின் பெயர்களைச் சொல்லியே, அவர்களின் பெயர்களுக்கு மேல் நம் பெயர்களை, அழித்து எழுதிக் கொள்ளத் துடிக்கின்றோம். நம் மூளைத் திரட்சியில் உள்ள விலை போகாத சரக்குகளுக்கெல்லாம், அவர்களின் முத்திரைகளைக் குத்தி, கள்ளச் சந்தையில் விலை பேசித் திரிகின்றோம். நாம் யார் என்பது நமக்குத் தெரிகிறது; பிறர்க்குத் தெரியாது என்று நம்பிக் கிடக்கின்றோம். ஆனால், நம் தலைவர்கள் ஆக்கிக்கொடுத்த தன்மானக் கண்ணாடியில், நம்மைப்

Scanned with CamScanner

பார்த்து, அருவருப்படைந்து, முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு, அவர்கள் ஏளன நகை செய்கிறார்கள் என்பதை ஏன் நம்மால் பார்க்க முடிவதில்லை? கலைவாணர் 'நல்லதம்பி'யில் சொல்லுவார் நம் கண்களில் சதை வளர்ந்திருக்கின்றது, என்று! வெறும் சதையன்று; ஊளைச் சதை!

உண்மையைப் பார்க்க நம் கண்கள் கூசுகின்றன! யார் யாரிடமோ, திரைக்கு மறைவில் எழுதி வாங்கிய நூலில் நம் பெயர்களை அச்சிட்டுக்கொண்டு, வெளியீட்டு விழாக் கொண்டாடுகிறோம்! நம்மை வாழ்த்திப் பேசவந்தவர்களின் வெட்கங்கெட்ட பேச்சை, 'இந்திர'த்தனமாக நாம் வெளியிட்டுக் கொள்கிறோம். அகலிகைக்குத் தெரியாதா? இந்திரன் யார்? கவுதமன் யார் என்று? இருப்பினும் இன்ப நமைச்சலைத் தீர்த்துக்கொள்ள 'பத்தினி'த் தனமாகத்தானே இருந்தாள்?

எழுதத் தெரியாத எழுத்தாளர்களாக, பேசத் தெரியாத-பேச வராத பேச்சாளர்களாகத் தானே நாம் இருக்கிறோம். வெறும் எழுத்துகளை நிரப்பிப் பாடல்கள் என்கிறோம்! காது புளிக்கக் கத்துவதை இசை என்று நம்ப வைக்கின்றோம்! பணம் பத்தும்செய்கிறது. பணமில்லாதவனுக்குள்ள பத்தும் பாழாகிறது. 'நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும், நல்கூர்ந்தார், சொற்பொருள் சோர்வு படும்'—என்பது திருவள்ளுவர் காலத்திலுமா இருந்தது; நம்ப முடியவில்லையே! இன்று நடக்கின்ற வெள்ளித் திரைக் கூத்துகள், அவருக்கெப்படி அன்றே தெரிந்தன?

நம்ம சாதியானாகவே பார்த்து நம் பக்கத்தில் வைத்துக்கொள்கிறோம்; அவனைக் கொண்டே நம்மைப் புகழச் செய்கிறோம்? யாருக்கு என்ன வந்தது? ஏன் இந்தக் கூப்பாடு போடுகிறோம்?

சிங்களவன் அடித்து விரட்டுகிறான், நம் தம்பியை! சேலையை அவிழ்த்துப் பார்க்கிறான், நம் தங்கையை! இங்கு, வாய்பேச்சால் அவர்களுக்கு வாழ்வளிக்கப் பார்க்கிறோம். எவனையோ நோக்கி, எடு, படையை என்று தொண்டை கிழியக் கத்திக்கொண்டிருக்கிறோம், நாம்! போதுமா, நமக்கு வீரம்? புளிப்பேறிக் கிடக்கின்றன நம் பணங்கள்! அவற்றைக் குண்டுகளாக மாற்ற எத்தனை நேரமாகும் நமக்கு? துமுக்கிகளில் அவற்றைத் திணித்துச் சிங்களவனின், உயிர் நாடிக்குள் ஊடுருவச் செய்ய எவ்வளவு நேரம் பிடிக்கும் நமக்கு? மேனா மினுக்கித்தனமாக, கையையும் காலையும் உதைத்துக்கொண்டு பேசித் திரிகின்றோம், நாம்! பெட்டி நிறைய பணம் வழிந்து கொட்டியும், போதவில்லையே நமக்கு? வேட்டிகளை அவிழ்த்து விட்டுக் கொள்கிறோம்! சேலைகளை அதிகப்படுத்திக் கொள்கிறோம்? பருமிகைக்கும் படுக்கைத் தனத்திற்கும் பணம் வேண்டாமா? அதற்கு, இதற்கு என்று ஆலாய்ப் பறந்து, மக்களிடம் கைநீட்டி, மடி நிரப்பிக் கொள்ளத் துடித்துக் கிடக்கிறோம். சேர்த்த பணத்தில் சென்னையை மட்டுமென்ன, தில்லியையும் சேர்த்து விலைக்கு வாங்கலாமே, நாம்!

ஆனாலும் வடவனுக்கு வால் பிடிக்கவே துடிக்கின்றோம்! பதவிக்குப் 'பரதம்' ஆடுகின்றோம்! உதவிக்கு ஊரைக் கூட்டுகிறோம்,

கண்ணீரில் முழுகுபவர்களைக் காப்பதற்குத் தண்ணீரில் குதித்தால் என்ன? தலையா முழுகிவிடும்? பாளையங் கோட்டையைப் பார்த்த நமக்கு, அசயின் சார்சுக்கோட்டை எதற்கு? தில்லிக்கோட்டை யன்றோ நம் குறி?

வடவன் என்ன புலியா, உளியமா? கான்மாவா, உளோமாவா? புலியடித்துச் சாவதற்கு முன் கிலியடித்துச் செத்தால் என்னாவது? எழுந்து நிற்கவேண்டியதுதானே. நாம்! ஏடாகூடம் பேசிக்கொண் டிருந்தால் எது நடக்கும்? துணிந்தவனுக்குத் துமுக்கியென்ன? தூக்குக் கயறென்ன? நம்மில் ஒரு பிந்தரன்வாலே கூடவா, இல்லை? தமிழ் மண்ணை வடவர்களின் வணிகக் கூடமாகும்போது, நம் உடம்பு மண் உளைக்கூடம் ஆனால் என்ன?

'அடே! அடே! தில்லிக்காரா! எங்களவன் சிங்களவனால் கடித்துக் குதறப்படுகிறான்! நீ, இந்தியாவை ஒன்றென்கிறாய்! இந்தியாவில் தமிழ்நாட்டை இணைத்துவிட்டுப் போய்விட்டான், இங்கிலாந்துக்காரன்! எனவே, படையாளிகளும், கருவிகளும் உன் கடை நாய்களாகிப் போய்விட்டன' ஒன்றால், தமிழ் நாட்டவன் தம்பியைக் காக்க நீ படையை நடத்து! அன்றால் படைக் கருவிகளை எங்கள் கைகளில் கொடுத்து! அதுவும் ஒத்து வராதது என்றால், இராசீவ் தம்பி, எங்கள் மண்ணை எங்களிடம் கொடுத்து விடப்பா? நாங்கள் பார்த்துக் கொள்கிறோம், எங்களுக்குரிய சிக்கலை! உங்க ளுக்கும் எங்களுக்கும் என்னறைக்குமே, ஒத்து வராதப்பா'' என்று ஒரே உறுமலாய் உறுமிவிட வேண்டியதுதானே! ஒரே முரசாய்க் கொட்டிவிட வேண்டியதுதானே? நாம், ஏன் அஞ்சிக் கிடக்க வேண்டும்? அவனிடம் கெஞ்சிக் கிடக்கவேண்டும்?

இங்கு இராசீவ் போலும் இளைஞர்கள் இல்லையா? தூணைத் துரும்பாக்கும் பேச்செதற்கு? எட்டி உதைத்தால் இலங்கை இருக்கும் இடம் தெரியாமல் இந்துமா கடலிலே போய் முழுகி விடுமே! அதற்காகப் பத்தினிப் பெண்களைப் பறிகொடுப்பதா? அவர்களின் கற்பழிப்பைக் காதுகள் கேட்பதா?

நல்லாண்மை என்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்

—என்று நமக்குத்தானே ஆண்மை இலக்கணம் பாடி வைத்தார் திருவள்ளுவப் பேராசான்? அந்த வீரம் வெறும் நாற்காலி வீர மாகப் போவதா?

இந்தியை எதிர்க்கின்றோம்; எதிர்க்கின்றோம்! இன்னும் எதிர்த் துக்கொண்டு கிடக்கின்றோம்! இதை ஏமாளித்தனம் என்பதா? கோமாளித்தனம் என்பதா? இந்தி யெதிர்ப்புக்கு ஒரு போராட் டம்! வகுப்புரிமைக்கு ஒரு பேரணி! மங்களா தேவியம்மன் கோவி லுக்கு ஒரு படையெடுப்பு! கச்சத் தீவுக்கு ஓர் அறிக்கை! சேதுக் கால்வாய்க்கொரு வேண்டுகோள்! மண்டல் குழுவுக்கு ஒரு மறியல்! கோயில் வழிபாட்டுக்கு ஒரு கூப்பாடு! சமசுகிருத வல்லாண் மைக்கு ஒரு மாநாடு! சாதியொழிப்பிற்கு ஒரு தீர்மானம்! தமி

செய்திகள்

1: தெய்வத் தமிழ் மன்றம் — மயிலாடுதுறை.

கடந்த 16—12—84 ஞாயிறு அன்று, காலை 10 மணியளவில், மயிலாடுதுறை, தெய்வத் தமிழ் மன்றத்தின் 14 ஆவது ஆண்டு விழா, மன்றத் தலைவர் திரு. எசு. பாசுகரன் தலைமையில் நடைபெற்றது. மன்றச் செயலர் திரு. இரா. இராசசேகரன் அனைவரையும் வரவேற்று அறிக்கை படித்தார். விழாவின் முதல் நிகழ்ச்சியாக, பேரா. திரு. அ. அறிவொளி க.மு., அவர்கள் 'சிவப்பிரகாசர் செந்தமிழில் - 'ஆளுடைப்பிள்ளை' என்னும் தலைப்பிலும், பேரா. அ. வ. இராசகோபாலன் 'ஆளுடை அரசு' என்னும் தலைப்பிலும், பேரா. திரு. சோ. சத்தியசிலன், 'ஆளுடைய நம்பி' என்னும் தலைப்பிலும், விரிவுரை யாற்றினர்.

இறுதியாக, 'தமிழறம்' என்னும் தலைப்பில் பாவலரேறு பெருஞ்சித்திரனார், ஏறத்தாழ மூன்றே கால்மணி நேரம், தமிழறம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

ழீழத்திற்கு ஒரு பேரணி! இப்படி எத்தனை எத்தனை இழவுகளுக்கு எல்லாம் தனித் தனியாகக் கட்டிப் பிடித்துக்கொண்டு ஒப்பாரி வைப்பது? அழுவது ? ஒரே அழுகை அழுதுவிட்டுப் போவதில் நமக்கென்ன அத்தனைத் தடங்கல்! ஏதுங்கெட்ட இந்தி மொழி ஒன்றைத் தடுக்க ஐம்பது ஆண்டுகள் போராடுவதா? பெரியார் என்ன? சோமசுந்தர பாரதி என்ன? அண்ணா என்ன? ஈழத்தடிகள் என்ன? மறைமலையடிகள் என்ன? பாவாணர் என்ன? பாரதிதாசன் என்ன?—இவர்கள் எல்லாரும் 'இலைசு'ப்பட்ட ஆள்களா ? இந்தி எருமை பின்வாங்கியதா? இல்லையே! பின், இன்னும் என்ன வாழ்கிறது? ஏன் நமக்குள் தயக்கம்? என்ன மயக்கம்? ஒரேயடியாய் நமக்கு வந்துள்ள இடர்ப்பாடுகளையெல்லாம் ஒரேயடியாகத் தீர்த்துக்கட்ட நாம் முயல வேண்டுவதுதானே!

அழைப்பு விடுக்கின்றோம், நாம்! அணி சேர்க்க நம்மிடம் போதிய படையில்லை என்பதால்! அறை கூவுகிறோம் நாம்! நாம் தானைத் தலைவர்கள் இல்லை என்பதால்! தயங்கிக் கிடக்கிறோம். நாம்; நாம் தளபதிகளாகச் சொல்லிக்கொள்ளவில்லை. ஆதலால்! ஆனால், நாமும் தனித்தாவது எம்பிக்குதிக்க எத்தனைநேரம் ஆகும், நமக்கு! பார்த்துப் பார்த்துப் பதுங்கியிருந்தோம்! பயனில்லை என்பதால் ஆர்த்தெழ நாம் முடிவு கட்டிவிட்டோம்! அணி திரள்கிறோம்! நடையிடும் நாள் அண்மையில் வருகிறது! எழுந்துவிட்டோம் நாம்! இனி, நமைத்தடுக்க எவரும்இல்லை. நம்மிடத்தில்! எழுக, இளைஞர் படையே! எடுத்தடி வைக்கின்ற நாளை எதிர்பார்த்திருங்கள்!

— பெருஞ்சித்திரனார்.

என்பது என்ன என்றும், தர்மம் என்னும் சொல் அறம் என்னும் சொற்பொருளைச் சுட்டாது என்றும், தர்மம் என்பது வடசொல் என்றும், அதற்கு 'வரையறுக்கப்பட்ட நடைமுறை' என்பதுதான் பொருள் என்றும், அது மக்களுக்குள் ஏற்பாடு செய்யப்பெற்ற ஓர் ஒப்பந்தம் போல்வது என்றும், 'வர்ணாச்ரம தர்மம்' என்றால் 'நிற அடிப்படையில் வகுக்கப்பட்ட மக்கள் நடைமுறை' என்பதே பொருள் என்றும், அதன்படியே மனுவால் எழுதப்பெற்ற மக்களுக்கான நடையே 'மனுதர்மம்' என்னும் பெயரில் வழங்குகிறது என்றும், தமிழர் அறத்திற்கும், இந்த வருண ஒழுக்கமான நடைமுறைக்கும் கொஞ்சங்கூடத் தொடர்பில்லை என்றும், தர்மம் என்பது ஆரிய இனத்துக்குச் சார்பானது என்றும், ஆனால், தமிழர் 'அறம்' என்பது மக்கள் இனத்திற்கே பொதுவான ஒரு மக்களியல் கோட்பாடு என்றும், அது, மக்கள் எல்லார்க்கும் எல்லா நலன்களும் கிடைக்கின்ற வகையில் ஒவ்வொருவரும் எவ்வெவ்வாறு, பிறர்க்கு இடையூறு இல்லாத வகையில் நடந்துகொள்ள வேண்டுமோ, அவ்வாறான பொதுநல நோக்கைச் சுட்டுகின்ற 'பொதுமை ஒழுங்கை' என்றும், மணிமேகலையில்,

அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவா திதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது,
கண்டது இல்லெனக் காவலன் உரைக்கும்

—என்று வருவதும்,

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாம் தலை

—என்பது திருக்குறளுள் கூறப்படுவனவும்தாம் உண்மையான அறத்திற்கான விளக்கங்கள் ஆகும் என்றும், ஒரு குலத்துக்கொரு நீதி கூறும், 'மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழித்தலும்' பரிமேலழகர் முதலியோர் சுட்டிச் சொல்வதும் இட்டுக் கட்டுவதும் அறம் ஆகாது என்றும், மிக விளக்கமாகவும், விரிவாகவும் கூறியதுடன், பல்வேறு சான்றுகளையும் காட்டி, தமிழர் தம் அறவியல் வாழ்க்கை, அவர்தம் பண்பாடு, கலைகள், மொழிச் சிறப்பியல்கள் முதலியன எவ்வாறு கட்டிக்காக்கப் பெற்று, நிலை நிறுத்தப் பெறவேண்டும் என்றும் உரைத்து, அனைவரும் வியப்பும் மகிழ்வும் உண்மை உணர்வும் கொள்ளுமாறு நிறைவுரை செய்தார்கள்.

பழுத்த சைவச் சமயச் சார்புடைய, அம் மன்றத்தினர், தாம் இதுவரை கொண்டொழுகும் வைதீகம் கலந்த சமய வுணர்வின் போலிமைகளை, நன்குணர்ந்த வகையில் ஆர்வமுடன் கேட்டதும், பாவலரேறு அவர்களின் சொற்பொழிவைச் செவிகொள்ள, அண்டை அயல் ஊர்களிலிருந்தும் கல்லூரிப் பேராசிரியர்களும், மாணவர்களும், அன்பர்களும் வந்திருந்து, பிற்பகல் நெடுநேரம் ஆகியும், பகல் உணவையும் பொருட்படுத்தாமல் இறுதிவரை இருந்து கேட்டதும் குறிப்பிடத்தக்கன,

விழாவின் இறுதி நிகழ்ச்சியாக மாலை 6 மணியளவில் பட்டி மன்றம் நடந்தது.

2. திருச்சி, தூய வளனார் கல்லூரி — அனைத்துலக இளைஞர் ஆண்டு சிறப்புப் பட்டிமன்ற நிகழ்ச்சி!

இந்த ஆண்டு அனைத்துலக இளைஞர் ஆண்டு என்பதை யொட்டி, திருச்சி, தூய வளனார் கல்லூரி (செயின்ட் சோசப் கல்லூரி) ஒரு சிறப்புப் பட்டிமன்ற நிகழ்ச்சியைக் கடந்த 29-1-85 செவ்வாய் மாலை 5 மணியளவில், நடத்திச் சிறப்புச் செய்தது. கல்லூரியின் தூய வளனார் பேரவை இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது. தொடக்கத்தில் வரவேற்புரையை பேரா. சாமி முத்து அவர்கள் நிகழ்த்தினார். கல்லூரி முதல்வர், பட்டிமன்ற நடுவர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுக்குக் கைத் நூலாடைப் போர்த்துச் சிறப்பித்தார். பட்டிமன்றத் தலைப்பு "இன்றைய இளைஞர்களை வாழ்க்கைத் துறைகளில் நெறிப்படுத்தும் பேராற்றல் பெற்ற தமிழ் இலக்கியம் திருக்குறளே" என்பது.

இக் கருத்தை ஒட்டிக் கருத்துரையாடியவர்கள்; பேரா. கா. சோசப் கலியபெருமாள், க. மு.. திரு. மு. வ. பரமசிவம் (மின் பொறியியல் மடலர்); திரு. திருச்சி கலியன்பன் ஆகியோர். அக் கருத்தை வெட்டிக் கருத்துரையாடியவர்கள்: பரி. ப. ஆறுமுகம், க.மு ; மெய். இ. திரு. அ. மரியகுசை (எந்திரப் பொறியியல் மடலர்); திரு. மா. தூசை மாணிக்கம் ஆகியோர்.

நிகழ்ச்சிக்கு ஏராளமான மாணவர்களும், பேராசிரியர்களும், பொது மக்களும் நிரம்பியிருந்தனர். பட்டிமன்றம் ஏறத்தாழ 3 மணி நேரம் நடந்தது. பட்டிமன்ற உரையாளர்கள், ஏறத்தாழ ஒவ்வொன்றரை மணி நேரம் வழக்காடினர். இரண்டு பட்டிமன்றத் தலைவர்களும் மிகத் திறமையாகவும், நகைச் சுவையாகவும் தலைப்புக் கருத்தை ஒட்டியும்-வெட்டியும் மக்கள் மனங் கொள்ளுமாறு தம் தம் கருத்துகளை எடுத்துரைத்தனர். அவர்களைப்பின்பற்றி இரண்டு அணியினரும் நன்றாகவே அணித் தலைவர்களின் கருத்துகளைப் பின் தொடர்ந்தனர், அவையோர் கல கலப்போடு கருத்துரைகளில் ஒன்றிக் கலந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

முன்னுரையாகவும் முடிவில் தீர்ப்புரையாகவும் பாவலரேறு அவர்கள் ஏறத்தாழ ஒன்றே முக்கால் மணி நேரம். தலைப்புக் கருத்துக் கிணைய மிக விரிவாகத் தலைப்பை எடுத்து விளக்கியும், அணியினரின் கருத்துகளுக்கு விரிவுகூறியும், இன்றைய இளைஞர்களை வாழ்க்கைத் துறைகளில் நெறிப்படுத்தும் பேராற்றல் பெற்ற தமிழ் இலக்கியம், அன்றும், இன்றும், என்றும் திருக்குறளே என்று தீர்ப்பு வழங்கினார். நன்றியுரைக்குப் பின் அனைவரும் மனநிறைவுடன் வெளியேற விழா இனிது நிறைவுற்றது.

Scanned with CamScanner

3. திருவெறும்பூர், நற்றமிழ்ப் பேரவைச் சிறப்புக்கூட்டம் !

சென்ற 30—1—85 மாலை 7 மணியளவில், திருச்சி ஊரகத்தில் ஊரக மன்றக் கூடத்தில், நற்றமிழ்ப் பேரவையின் சார்பில் 'அக வாழ்க்கை மலர் - திருக்குறள் காட்டும் நெறி', என்னுந் தலைப்பில், திரு. தி. இரா. சிவகுமார் அவர்கள் தலைமையில், சிறப்புக் கூட்டம் ஒன்று நிகழ்ந்தது. திரு. குழந்தை ஈசுவரசன் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடினார். தலைவரின் முன்னுரைக்குப் பின், திருவாளர்கள்: மரிய துரை, நாரா. மகிழ்நன், இரத்தினம் ஆகியோர், தலைப்பை விளக்கிப்பேசியபின்னர், பாவலரேறு பெருஞ்சித்திரனார், தலைப்புக் கருத்தைக் கரும் பலகையில் படங்களுடன் விளக்கி, ஏறத்தாழ மூன்றேமுக்கால் மணி நேரம் மிக விரிவாகவும், விளக்கமாகவும், திருக்குறள் காட்டும் அக வாழ்வியலைப்பற்றி விரிவுரையாற்றினார். பொதுமக்கள் இறுதி வரை, சிறிதும் கலையாமலும், சிறு ஒலியலைவு காட்டாமலும் இருந்து கேட்டது மிகவும் குறிப்பிடத் தக்கது. திருச்சி நகரெங்கும் போலித்தனமும் ஆரவாரமும் நிறைந்த சமயச் சொற்பொழிவுகளுக்கிடையில், பாவலரேறு அவர்களின் இத்தகைய மெய்ப்பொருள் வாழ்வியல் பொழிவு மிகவும் ஏற்றமிக்கதாக இருந்ததென்று அனைவரும் பேசிச்சென்றனர்.

4. பொன். தனித்தமிழ்க் கொற்றன்-உமையரசி-வாழ்க !

சென்ற 1—2—85 வெள்ளி காலை 9 மணியளவில், திருச்சி, செந்துறை அன்பு இல்லத்தில், கிழ மாளிகை, தனித்தமிழ் மறவர் மறைந்த வை. பொன்னம்பலனார்-தங்கம்மாள் அவர்கள் மகனும் செந்துறை அரசு மருத்துவரும் ஆகிய செல்வன்: பொன். தனித்தமிழ்க்கொற்றன் அவர்களுக்கும், செல்வி: உமையரசி (உமா இராணி)க்கும், பெரியார் சம உரிமைக் கழகப்பொதுச்செயலாளர் திரு. வே. ஆனைமுத்து அவர்களின் தலைமையில் திருமணம் நடைபெற்றது. புலவர் திரு. வே. திருஞானம் க. மு., வரவேற்புரையாற்றினார். பொறியாளர் திரு. ப. பன்னீர்ச்செல்வம் முன்மொழிவு செய்தார். தலைவரின் முன்னுரை, திருமண நிறைவு ஆகியவற்றுக்குப்பின், மணமக்களை வாழ்த்தி பாவலரேறு பெருஞ்சித்திரனார், மிகவும் நயனும் பயனும் விளையுமாறு, நீண்ட நெடிய வாழ்வியலுரை வழங்கினார். அவர்களுடன் திருவாளர்கள்: எசு. சிவசுப்பிரமணியம், செ. சதாசிவம், ப. மு. சாந்தானந்தம், பா. எசு. மாசிலாமணி ச.ம.உ., ஏற்காடு சகந்நாதன், வேங்கடாசலம், புலவர். கு. கலியபெருமாள், இராசா, புலவர் இளமுருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியில் மணமக்கள் வாழ்த்துரைக்குப்பின், பகல் 1 மணியளவில் விழா இனிது நிறைவுற்றது.

உ. த. மு. க. செயற்குழுக் கூட்டம் !

வரும் மே-திங்கள் 12ஆம் பக்கல், ஈரோட்டில் உலகத் தமிழின முன்னேற்றக் கழகப் பொறுப்பாளர்கள், அமைப்பாளர்கள் இணைந்து கழகத்தின் எதிர்காலத்திட்டங்கள் தொடர்பாக, மாநில அளவிலான செயற்குழு கூட்ட உள்ளனர். மேலும் விளக்கத்திற்கு, 'தமிழ் நிலம்' இதழ் எண்: 54 ஐப் பார்க்கவும்.

Scanned with CamScanner

திருவள்ளுவரின் திருவுருவம்!

இந்த இதழின் முகப்பில் திருவள்ளுவரின் திருவுருவப்படம் ஒன்று இணைக்கப்பெற்றுள்ளது. இப் படம், பழனி, மலையப்பசாமி சித்த மருத்துவமனையில் வைக்கப்பெற்றிருக்கும் பதினென் சித்தர்களின் திருவுருவப் படங்களுடன், இருந்ததை, அண்மையில் நாம் அங்கு நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தபொழுது கண்டு மகிழ நேர்ந்தது.

இப் படத்தின்கண் உள்ள உருவந்தான் திருவள்ளுவர் உருவம் என்று சொல்லக்கூடிய அளவில் மிகப் பொருத்தமாக நமக்குப் பட்டது.

இப்பொழுதுள்ள அனைத்துத் திருவள்ளுவரின் திருவுருவப் படங்களோ, உருவச்சிலைகளோ, திருவள்ளுவரின் சரியான திருவுருவங்களாக நமக்குப் படவில்லை. இறுதியாகச், கலைஞர் முயற்சியில், பார்ப்பன ஓவியர் திரு. வேணுகோபால் அவர்கள உருவாக்கிய கோணற் கொண்டை உருவமும், வடநாட்டார் ஒருவர் போல் திருவள்ளுவரைக் காட்டுகிறதே தவிர, தமிழரைப்போலக் காட்டவில்லை.

மேலும், இக்கால் வெளிவந்துள்ள அனைத்துத் திருவள்ளுவரின் திருவுருவங்களும் அவரை, நன்றாகக் கொழுத்துள்ள உடலினராகவே, வரையப்பெற்றுள்ளன. திருவள்ளுவரின் உடல் அவ்வாறிருக்கவே இயலாது. நம்மால் அண்மையில் நெல்லைமாவட்டம் ஏரலில் திறந்துவைக்கப் பெற்ற திருவள்ளுவர் சிலையும், நன்றாக வடிக்கப் பெற்றுள்ளதே தவிர, திருவள்ளுவரின் திருவுருவம் அவ்வாறுதான், இருந்திருக்கும் என்று கொள்ளவியலாது. அதில் அவரின் உடல் மல்லன் ஒருவனின் உடல்போல், பருத்த தோள்களும், கொழுத்த உடம்பாகவுமே காட்டப் பெற்றுள்ளது. அவரின் மேல்நோக்கி முடித்த தலையும், கீழ்நோக்கி மடிந்த தாடியும், பெருமுயற்சி செய்து புனைந்து கொள்ளப்பெற்ற சீக்கியர் ஒருவருடையன போலவே காட்சியளிக்கின்றன. மீசையும்கூட வெட்டிச் செப்பப்படுத்தப் பெற்றதாகச் செதுக்கப் பெற்றுள்ளது. நெய்பூசி நீவித் தம் தாடியையும், மீசையையும், தலைமுடியையும் புனைவு செய்து செப்பப்படுத்திச் சுவடித்துக் கொள்ளும், அழகு வேட்கைப் புனைவானராகவா அம்மெய்யறிவாளர் இருந்திருப்பார்? இவற்றுக்கெல்லாம் அன்றாடம் தம் அரிய சிறு பொழுதையாகிலும் ஒதுக்குதற்கு அப் பேரறிவாளனின் உள்ளம் ஒருப்பட்டிருக்குமா? எண்ணிப்பார்மின்!

தன்னூன் பெருக்கத்தையும் (251), வானுயர் தோற்றத்தையும் (272), ஊன் ஓம்பும் வாழ்க்கையையும் (963) கடிந்தவர் அம் மெய்யறிவாளர். நுண்மாண் நுழைபுலம் இல்லாதவர் தாம் எழில் நலத்தில் கருத்துச் செலுத்துவார் (407) என்றும், நன்றறிவாரினும் கயவரே திரு (செல்வ நலன் கொண்டதால், அதன்வழி ஓரளவு உடல் அழகும்) உடையவராக விருப்பார் (1072) என்றும், கருத்தறிவித்தவர் அவர். உடுப்பதும் உண்பதும் பிறர் வடுக்காண

அடிப்படையானவை (1079) என்று கூறிய மாந்த உளவியல் அறிந்தவர் அவர். (திருவள்ளுவர் உருவங்கள் பல உயரிய அழகிய மெல்லிய, உடைகள் உடுத்தியிருப்பதை ஓர்க.)

மேலும் அப்பேரறிவு சான்ற பெருமான், உடம்பு இடும்பைக்கு இலக்கம் (627) என்றுணர்ந்தவர். ஒருவர் மீண்டும் மீண்டும் உலகத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளுவதற்கு அடிப்படையாகவும் சுமையாகவும் இருப்பது உடம்பே (345) என்று உடலியலும் உயிரியலும், மெய்யறிவியலும், உணர்ந்த மேதை அவர். வயிற்றினது பசித்தீயின் அளவறியாமல் உண்ணுவதும், பேருண்டி கொள்வதும் அளவற்ற நோய்களை வருவிக்கும் (947) என்று அறிவுரை கூறியவரும், முன் உண்டது முழுவதும் செரித்த பிறகே, மீண்டும் செரிப்பதற்கு ஏற்ற அளவு உண்பதே நெடிய வாழ்க்கைக்கு வழி [943] என்று மருத்துவஇயல் அறிந்தவரும் ஆகிய திருவள்ளுவமுனைவர், பல்சாரவுணவுகளை அளவறியா உண்டு கொழுப்பவரைப்போலும் உடம்பைப் பெற்றிருப்பாரோ, எண்ணுமின்கள்!

இனியும், தெளிந்த குளிர்நீரில் ஊறிய வெண்பருக்கையையே உண்டாலும், அது தன் முயற்சியால் கிடைக்கப்பெற்றுண்ணுவதே இனிய சுவையானது, மகிழ்ச்சி தருவது [1065] என்று கூறிய, உழைத்தே உண்டிருந்திருக்கும் தன் முயற்சியாளராகத் தாம் திருவள்ளுவப் பொதுமையாளர் இருந்திருக்க முடியும். அவர் ஓர் அரசனுக்கிருக்கும் உடல் வளப்பத்தைப் பெறுவதாயின் நெய்யுஞ்சோறும், பாலும் பழமுமன்றோ உண்டிருக்க வேண்டும். இஃது அவர்போலும் அறஞ்சார்ந்த நல்குரவு [1047] கண்ட ஒருவர்க்கு வாய்ப்பதாகுமோ? மேலும் உருவுகண்டு எள்ளாமை வேண்டும் (667) என்னும் உண்மை உரைத்தவர் உருவில் எளிமையும், திருவில் ஒளிமையும் இருக்க வேண்டுமே தவிர, பரிதாகிய உடம்புவாகும், அரிதாகிய அழகு நலமும் பெற்றவராகத்தான் இருக்க வேண்டும் என்பதில் என்ன சிறப்பு உளதோ யாமறியோம்.

இன்னும், பணியுமாம் என்றும் பெருமை [973] என்றும், பெருக்கத்து வேண்டும் பணிதல் [963] என்றும், அடக்கம் அமரருள் உய்க்கும் [121] என்றும், நிலையில் திரியாது அடங்கியான் தோற்றமே, மலையினும் மாணப்பெரிது [124] என்றும், அடக்கத்திற்கு இலக்கணம் கூறியவர், உடுப்பதிலும், தலைப்புனைவிலும் இத்துணைக் கவனம் செலுத்தியிருப்பாரோ? இரார்!

எனவே, இதுவரையில் நாம் அனைவரும் கண்டுவரும் திருவள்ளுவர் திருவுருவங்கள், திருக்குறளை நன்கு கற்றறிந்தார்க்குப் பொருந்திவராப் புனைவுருவங்களாகவே போயின என்க.

இனி, திருவள்ளுவரின் உருவம் எத்தகையது என்பதற்கு எந்தச் சான்றும் இல்லை. இன்றுவரை நமக்குக் கிடைத்துள்ள உருவங்கள் கற்பனை வரைவடிவங்களே. திருவள்ளுவப்பெருமானின் மேல் உள்ள காதலால், அன்பர்கள் தம் உள்ளத்து அழகொழுக

எழுதிப்பார்த்தும், மாசறு வடிவினுரை நேசமுற ஒப்பவைத்தும், வரைந்த--செதுக்கிய வடிவங்களே! உயர்நூல் நுண்மாண் நுழை புலமிக்க மயர்வறு வான்புகழ் தெய்வப் புலவரை, ஒப்பாரும் மிக்காரும் அற்ற செப்பரிய வடிவத்தோடு, ஆவலுடன் அழகுற எழுதுவது பிழையன்றுதான். இருப்பினும் அத்தகைய கற்பனையைப், பொருந்திய கற்பனையோடு, கலையழகை முன் வைத்து மட்டும் முகாமைப்படுத்தாமல், உளவியலையும், அறிவியலையும், மெய்யறிவியலையும், உயிரியலையும், காலநிலையினையும், அக்காலத்தின் மாந்தர்தம் தோற்றவியலையும், வரலாற்றியலையும், கற்பனைக்குட்பட்ட அறிஞர்தம் அறிவுப் பரப்பையும் அவர்தம் நூலாக்க வழி அறிந்து, அவரின் வடிவத்தைச் சமைப்பதே மாற்றம் தேவைப்படாத நிலைப்பாடான முயற்சியாக இருக்க முடியும்.]

அந்த வகையில் இவ்விதழில் வெளியிடப்பெற்றுள்ள திருவள்ளுவர்தம் திருவுருவ வடிவம், கற்பனையாகத்தான் இருக்க முடியுமென்றாலும், ஓரளவு, இன்றுள்ள அனைத்து வடிவங்களினும் பொருந்திய வடிவமாக இருப்பதைக் கண்டு, மனகிழ்ந்து, யாம் பெற்ற மகிழ்ச்சியை யாவரும் பெறவேண்டும் என்னும் நன்னோக்கத்துடன் இங்கு வெளியிட்டுள்ளோம். அன்பர்கள் யாம் கூறிய வகையில் இன்றுள்ள வடிவங்களையும், இதனையும் ஒப்பவைத்துக் கண்டு, எம் கருத்துக் குறைபடும் இடங்களையோ, நிறைபெறும் இடங்களையோ, எண்ணிப்பார்க்கலாம்; எமக்கும் எழுதலாம்; இயன்றால் அவற்றையும் வெளியிடுவோம்.

இப் படத்தில் உள்ள, திருவள்ளுவர் வடிவத்தில் சில உருப்பமைவு இலக்கணக் குறையிருப்பதை, ஓவிய நூல் ஓரளவறிந்த யாமும் உணர்கிறோம். இருப்பினும், இதன் பொதுத் தோற்றமும், முகவடிவும், மயிரொதுக்கமும், கண்கள், மூக்கு, கைகள், உடல் ஆகியவற்றின் அமைவும், ஓரளவு, மெய்யறிவுணர்வு பொதிந்தார் ஒருவர்க்குப் பொருந்துவனவாகும் என்பதுடன், இதன் வடிவமும் அக்காலத் தமிழர் தோற்றப் படிநிலை வளர்ச்சிக்கேற்பவே அமைந்திருக்கலாம் என்றும் கருதற்பாலது. இதில் திருத்தங்களே தேவையில்லை என்று நாம் கூறுவதாக எண்ணாமல், செவ்விய திருத்தங்கள் செய்து கொள்வதாற் பிழையில்லை என்றே நாம் கருதுவதாக எண்ணிக் கொள்க.

— பெருஞ்சித்திரன்

சொல்லாய்வறிஞர் ப. அருளி அவர்களின்

தமிழ் வளர்ச்சிக்கு ஒரு புத்தாக்க நூல்!

இவை தமிழல்ல

(அயற்சொல் அகராதி)

விலை 10-00; அஞ்சல் செலவு: 1-00; பதிவஞ்சல் செலவு: 5-00.

அமெரிக்காவை அச்சுறுத்தும் பால்வினை நோய்!

அமெரிக்கா இன்று பெரும் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளது. அதன் பகைவர்கள் வெளியிலிருந்து யாரும் அல்லர். உள் நாட்டிலேயே உருவாக்கம் செய்யப்பட்டவர்கள்தாம். அவர்கள் யார்? பால்வினை நோய்களைப் பரப்பும், மிக நுண்ணிய நோயூக்கிகள் தாம் அந்தப் பகைவர்கள். இதுகாறும் மருத்துவர்களே அறிந்திராத புதிய வகைக் கமுக்க (இரகசிய) நோய்கள்கூட அங்கே தோன்றியுள்ளன. இதுகாறும், விலைமகளிர்களிடமும், குமுக இளமை விளையாட்டுப் பேர்வழிகளிடமுமே காணப்பட்டு வந்த இந்த நோய்கள், தங்குதடையற்ற பாலுறவினைக் குமுகாயம் அனுமதித்ததன் பயனாகவும், வரைமுறையற்ற காமக்களியாட்டங்களின் காரணமாகவும், இன்று அது நாட்டில் ஒரு பெரும் தொற்றுநோயாக மாறியுள்ளது.

இலோவாவிலுள்ளதொரு கிண்டர்கார்டன் பள்ளியில் இரண்டரை அகவையே நிரம்பிய குழந்தைக்கு இடம் மறுக்கப்பட்டது. காரணம், அக் குழந்தையிடம் பிறவியிலேயே காணப்பட்ட பால்வினை நோய் பிற குழந்தைகளுக்கும் பரவிவிடும் என்று ஆசிரியர்கள் அஞ்சியதனால்தான்.

தரப்படும் புள்ளி விளத்தங்கள் அஞ்சத்தக்கவை. 'கிழமைச் செய்தி' (நியூசுவீக்) என்னும் இதழின் செய்திப்படி, நான்கு அமெரிக்கர்களில் ஒருவர், தமது வாழ்வில் 15-க்கும் 55-க்கும் இடைப்பட்ட அகவையில், எப்போதாவது பால்வினை நோய்க்கு ஆட்பட்டே தீருவாராம். ஒவ்வொருநாளும், புதிதாக 27000 பேருக்கு இந்த நோய் தொற்றுகிறது என்றும், ஆண்டுதோறும் 1 கோடிப்பேர் இதற்காக மருத்துவர்களை நாடுகின்றனர் என்றும், அமெரிக்க குமுகநல நிறுவனம் கூறுகிறது. மருத்துவச் செலவு பெரிதும் அதிகரித்ததாலும், இலவய மருத்துவ உதவி பலருக்கும் கிடைக்காததாலும், பலரும் இந்த நோயுடன் வாழ்ந்து, மேலும் பலருக்கும் அந்நோயைப் பரப்பிக் கொண்டுள்ளனர்.

பொதுவாகக் காணப்படும், கிரந்தி (Syphilis), மேகம் (Venerea) போன்றவற்றை உயிர் முறிவு (ஆண்டிபயாடிக்கு)களின் மூலம் குணப்படுத்திவிட முடியும். ஆனால் புதிய வகை நோயான 'கிளாமிடியா டிரகோமேடிசு' என்பது அமெரிக்கர்களையே திணற அடிக்கிறது. 1984-இல் 20 இலக்கம் அமெரிக்கர்கள் மேக நோயாலும், 90,000 பேர் கிரந்தி நோயாலும் தாக்கப்பட்டனர் எனில், புதிய வகை நோய் ஆண்டொன்றுக்கு 30—40 இலக்கம் பேர்களைத் தாக்குகிறது. அதனைக் குணப்படுத்த முடியவில்லை. வலி, மலட்டுத்தன்மை, வேறுபாடான தாய்மைப்பேறு, மூளைத் தாக்கமடைந்த குழந்தைகள் பிறப்பு, புற்றுநோய் ஆகியவற்றை அது தோற்றுவிக்கிறது. ஆண்டுதோறும் 11000 பெண்களை அது மலடாக்குகிறது.

Scanned with CamScanner

ஏற்கனவே, சில ஆண்டுகளுக்கு முன்னர், ஏஐடிஎசு'(எய்ட்சு) என்ற புதிய நோய், தற்பாலினச் சேர்க்கையை வழக்கமாகக் கொண்ட அமெரிக்கர்களிடையே தோன்றிற்று. அந் நோய் பிடிக்கப்பட்டோரில் 73 விழுக்காட்டினர் தற்பாலினச் சேர்க்கையினர்; 17 விழுக்காட்டினர், ஊசி மூலம் வெறிமயக்கப் பொருளைச் செலுத்திக் கொள்வதற்கு அடிமையானோர். ஆனால், இந்த நோய், தொற்றிக் கொள்ளும் வாய்ப்பு இருப்பதால், தற்பாலினச் சேர்க்கைப் பிறரைத்தான் தாக்கவேண்டும் என்பதில்லை. எடுத்துக்காட்டாக, நடு ஆப்பிரிக்கா, எய்டி ஆகியவற்றிற்கு இந்நோய் 'ஏற்றுமதி' செய்யப்பட்டுள்ளது. 'எய்டசு' நோய் கண்டால், அது பெரும்பாலும் சாவில்தான் முடிவடைகிறது. அமெரிக்காவில் 1983-இல் 2635 பேருக்கு இந்நோய் இருந்தது; 1984-இல் அவர்களின் எண்ணிக்கை 4500 ஆக உயர்ந்தது.

வருங்காலத்தில், ஏதோ ஓர் எதிரியுடன் போர் புரியப் போவதாகக் கருதிக் கொண்டு, அமெரிக்க அரசு கோடிக் கோடி தாலர்களை அணுக்கருவி உருவாக்கத்தில் செலவிட்டு வருகிறது. நோயுற்றவர்களுக்கும், ஏழைகளுக்கும், அவர்களின் சுற்றுப்புறத் தூய்மைக்கும் பயன்பட வேண்டிய பொருளையெல்லாம் திரட்டி ஏவுகணைகளைச் செய்து வருகிறது அமெரிக்கா. இதற்கிடையே பல்வேறு வகை அச்சங்களால் தாக்கப்பட்டுள்ள மக்களின், வருங்காலமும் இருண்டு காணப்படுவதால், அவர்கள் தங்களையே வெறிமயக்கப் பொருள்களிலும், வேறு பல தீய வழிகளிலும் மூழ்கடித்துக் கொள்கின்றனர். புதிய புதிய நோய்களையும் தோற்றுவிக்கின்றனர்.

பிற நாடுகளுக்கு இது ஓர் எச்சரிக்கை. உலகம் முழுவதிலும் சுற்றிவரும் அமெரிக்கப் போர் வீரர்கள், துமுக்கி (துப்பாக்கி) களை மட்டும் தூக்கிக் கொண்டு திரியவில்லை. நோயூக்கிகளையும் சுமந்து கொண்டுள்ளனர்.

— ஏ.எசு. எம்.

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் அடங்கிய, கிழமை இதழ்

1.	தனியிதழ்	விலை	உரு. 0. 65
2.	ஆண்டுக் கட்டணம்		உரு. 36. 00
3.	அரையாண்டுக் கட்டணம்		உரு. 18. 00

தொடர்புக்கு: தமிழ் நிலம் – 5, அருணாசலத் தெரு. சென்னை 5.

பெரியார் மாவட்ட உ.த.மு.க. அமைப்பாளர் வீட்டுத் திருமணம்!

கடந்த 4-3-85 திங்கட்கிழமை காலை 6-30 மணிக்கு, ஈரோடு, கைக்கோள்லன் தோட்டம் ஆயிரவைசியர் திருமண மண்டபத்தில், பெரியார் மாவட்ட உ.த.மு.க. அமைப்பாளர் திரு பாவேந்தர் இராமலிங்கம் அவர்களின் புதல்வி செல்வி. தமிழ்ச்செல்விக்கும், கரிச்சபாளையம் திரு. பெருமாள் அவர்களின் புதல்வன் செல்வன் அமிர்தலிங்கத்திற்கும், உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் தலைமையில் திருமணம் நடந்தேறியது.

திருமணத்திற்கு மிகத் தொலைவிலிருந்தெல்லாம், உ.த.மு.க அன்பர்களும், தென்மொழி அன்பர்களும், உறவினர்களும், நண்பர்களும், ஏராளமான தொழில் முதல்வர்களும், திரண்ட அளவில் வந்திருந்து சிறப்புச் செய்தனர். கழக முதல்வர் தம் குடும்பத்துடன் வந்திருந்தார். மற்றும் துணைப்பொதுச் செயலர் திரு. தென்னவன்கோ, தலைமைக்கழக முதன்மைக் குழு உறுப்பினர் திரு தென்மொழி முத்துக்குமரனார், அமைப்புச் செயலர் திரு. தென்மொழி துரையரசன், கோவை மாவட்டப் பொருளர் திரு. ஆறுமுகம், பெரியார் மாவட்ட நகரச் செயலர் திரு. எழிலரசன் முதலியோரும் வந்திருந்தனர்.

திருமண நிகழ்விற்குப் பின்னர், வாழ்த்துரை நிகழ்ச்சிக்குப் புலவர் திரு. இரா. வடிவேலன் தலைமையேற்றார். உ.த.மு.க. துணைப் பொதுச்செயலாளர் திரு. தென்னவன்கோ, புலவர் திரு. பொதிகைச்செல்வன், திரு. வேலா அரசமாணிக்கம், பாவலர் திரு. ஆவத்தி வேங்கடாசலம், திரு. தென்மொழி முத்துக்குமரனார் ஆகியோர் மணமக்களை வாழ்த்தி உரையாற்றினர்.

இறுதியாகக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், தனி ஒருவரும், அவர்தம் குடும்பமும் முன்னேற வேண்டுமாயின் முதலில் இனம் முன்னேற்றம் அடைய வேண்டுமென்றும், அந்த இனமும் தன்னைக் காத்துக்கொள்ளும் தற்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமெனவும், சாதியும் மதமும், அவற்றின் சடங்கு முறைகளும் இன ஒற்றுமைக்கு வழியமைக்காமல், இனத்தைப் பிளவுபடுத்தியே வைக்குமென்றும் கூறி, பண்பாடும் ஒழுக ஒழுக்கமும்கூட இன முன்னேற்றத்தின் பின்னே தான் காக்கப்பெறுமென்றும் விளக்கி, மேற்கண்ட நிலைகளிலெல்லாம் உயர்ந்திருந்த தமிழின மக்கள், தங்களின் இன ஒற்றுமையைப் பெரிதாகக் கருதாமையால், இக்கால் தமிழ் முத்தில் வேற்றின மக்களால் துன்புறுத்தப்பட்டு, அடிக்கப்பட்டு அலைக்கழிக்கப்பட்டு, அழிக்கப்பட்டு வருவதை எடுத்துக்காட்டாகக்கூறி, இந்நிலைகளெல்லாம் அடியோடு தவிர்க்கப்பெற வேண்டுமாயின், தமிழின ஒற்றுமையே பெரிதாகக் கருதப்பெற வேண்டுமென்றும் உணர்த்தி, இறுதியில், மணமக்களை வாழ்த்தியுரைத்தார். முடிவில் பெரியார் மாவட்ட உ.த.மு.க. அமைப்பாளரும், மணமகளின் தந்தையும் ஆகிய திரு. பாவேந்தர் இராமலிங்கம் நன்றி கூறினார்.

செய்தி : தென்கோ

(அட்டை 4-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

என்று வருமோ என்று கவன்று கட்டுரை எழுத வேண்டிவருமா? இப்படிப் பார்த்துக்கொண்டே வரும்போது செய்தித்தாள் (ஏடுகள்) துறையும் பார்ப்பனர்கள் கையில்தான்! இப்படி இருக்கும்போது 1959 முதல் தமிழர்க்காக இந்த நாட்டில் (தென்மொழி போலும்) இதழ் நடத்தி வளர்ச்சி அடைய முடியவில்லை. ஆனால், 'துக்ளக்' இதழைப் பாருங்கள் எத்தனைப் பேர் வாங்கி விரும்பி படிக்கின்றார்கள்! நிறைய பேர்!

'அகல உழுவதை ஆழ உழு' என்பதுபோல் பல இதழ் நடத்துவதை ஒரே இதழ் நடத்துங்கள். அதில் பல பிரிவுகளுக்கும் இடம் கொடுத்துச் சிறப்போடு நடத்துங்கள். இதழ்கள் பல வெளியிட்டு விட்டால் வளர்ந்துவிட முடியாது. ஒரே இதழ்; இதே தமிழ்நாட்டில் வளரும் பல இதழ்களை ஆராயுங்கள். பல செய்திகளும் அடங்கிய ஒரே இதழ் போர்முரசாக முரசறையட்டும்!

'ஞாலம் கருதினும் கைகூடும்' இந்த இதழ் வளரக்கூட வளர்க்கக்கூட முடியாவிட்டால்... நம்மிடம் காலம் கருதிச் செய்ய முடியாதென்பதா? அன்புள்ள,

— உ.சோ. செந்தமிழ்ச்செல்வன், பிலிச்சுக்குழி

'தென்மொழி'த் தாளிகையின் வெளியீட்டு அறிக்கை

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1955)
19-ஈ. ஆ. (வகுப்பு 8-ஆம் கட்டளைப்படி)

1. வெளியிடும் இடம்	:	சென்னை
2. கால முறை	:	மாதம் ஒருமுறை
3. அச்சிடுவோர்பெயர்	:	திருவாட்டி: மா. தாமரை
இனம்	:	தமிழர்
முகவரி	:	தென்மொழி அச்சகம்
4. வெளியிடுவோர் பெயர்	:	திரு. பெருஞ்சித்திரனார்
இனம்	:	தமிழர்
முகவரி	:	தென்மொழி அச்சகம் சென்னை-5
5. ஆசிரியர் பெயர்	:	திரு. பெருஞ்சித்திரனார்
முகவரி	:	சென்னை-5
ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவரிகளும்		திரு. பெருஞ்சித்திரனார், சென்னை-5

பெருஞ்சித்திரனாராகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று உறுதி கூறுகின்றேன்.

25—2—85
சென்னை—5

பெருஞ்சித்திரன்.
(ஒப்பம்)

அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

தென்மொழியும், தமிழ்ச்சிட்டும் நிற்காமல் தொடர்ந்து வெளிவரும் என்றும் அவ்வாறு வருவதற்கு அன்பர்கள் என்ன வகையான முயற்சிகள் செய்யவேண்டுமென்றும் முந்தைய மாதத் தென்மொழி (சுவடி:20,ஓலை 5-6)-இல் ஒரு திட்டம் தெரிவிக்கப் பெற்றுள்ளது.

அத் திட்டத்தை மீண்டும் கீழே தருகிறோம். தென்மொழியும் தமிழ்ச்சிட்டும், நிற்கக்கூடாது என்று விரும்பும் நன்னெஞ்சங்கள் அருள்கனிந்து இத்திட்டத்திற்கு ஒல்லும் வகையால் உதவ வேண்டுகிறோம்.

1. தென்மொழி, தமிழ்ச்சிட்டு படிக்கின்ற ஒவ்வொருவரும் அல்லது இவ்விரண்டு இதழ்களும் தேவை என்று உணர்கின்ற ஒவ்வொருவரும் உடனடியாக ஆளுக்குப் பப்பத்து உறுப்பினர்களை (ஒவ்வொருவரும் அவரவர் படிக்கின்ற இதழ்க்கு)க் கட்டாயம் சேர்த்து உதவுதல் வேண்டும். பத்து உறுப்பினர்களைச் சேர்த்துத் தருபவருக்கு ஓராண்டு உறுப்பாண்மை இலவயமாக அளிக்கப்படும்.

2. 'தென்மொழி'க்கு வாணாள் உறுப்பினர் கட்டணம் உரு 200/- தமிழ்ச்சிட்டுக்கு உரு. 120/-

பத்து உறுப்பினர்களைச் சேர்க்க இயலாதவர்கள் அவர்கள் படிக்கின்ற ஏதேனும் ஓரிதழுக்கு ஐந்து வாணாள் உறுப்பினர் கட்டணங்களை வாங்கி அனுப்புதல் வேண்டும். அத்தகையவர்க்கும் ஓராண்டு உறுப்பாண்மை இலவயம்.

3. இத்துடன் தங்கள் ஊரில் 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு வரவில்லையானால், அங்கு 10 இதழ்களை வாங்கி விற்குமாறு முறைப்படி முன்பணம் கட்டும் முகவர் ஒருவரை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

4. இவையன்றித் தாங்கள் இவற்றின் வளர்ச்சிக்கென விரும்பும் கணிசமான நன்கொடைகளைத் தரவும், இயன்றால் திரட்டி அனுப் பவும் வேண்டும். இந் நான்கு முயற்சிகளையும் தொடர்ந்த ஒரு மூன்று அல்லது நான்கு மாதத்திற்குள் செய்து நிலையைச் சரி செய்தல் வேண்டும்.

போதுமான அளவு நிலை சரிசெய்யப்படாத பொழுது நாம் என்ன செய்வது? எனவே முடிவை அந்த விளைவுக்கே விட்டு விடுவோம். இவ் வகையில் ஈடுபடுபவர்களின் பெயர்ப் பட்டியல் தொடர்ந்து இதழ்களில் வெளியிடப்பெறுகிறது.

சு-21, ஒ 3-இன் தொடர்ச்சி: தொடர்: 2

அனைத்துலக வரலாற்றில் பெண்களின்
விடுதலைப் போராட்ட ஈடுபாடு!

பாலத்தீனப் போராட்டத்தில் பெண்களின் பங்கு!

1964-இல் தொடங்கிய 'பாலத்தீன விடுதலை இயக்கத்தில் முதலாவது பாலத்தீன தேசிய அவைக்கான முன்னேற்பாட்டுக் குழுவில் பங்குபெற்ற 400 பெருமகர்களில் (பிரதிநிதிகளில்) 21 பெண் பெருமகர்கள் பங்கு பற்றினர்.

குமுக விடுதலையையும், தேசிய விடுதலையையும் ஏற்படுத்துவதற்கு ஒரு பெண்கள் அமைப்பை உருவாக்கும் நோக்குடன் பெண்கள் மாநாடு ஒன்று 1945-ஆம் ஆண்டு 'செருசலம்' நகரில் நடைபெற்றது. 169 பெண்கள் பங்குபெற்ற இம் மாநாட்டில் 'பாலத்தீனிய பெண்கள் பொதுமன்றம்' (GUPW) என்னும் அமைப்பு உருவாக்கப்பெற்றுப், பாலத்தீன விடுதலை இயக்கத்துடன் சேர்ந்து செயல்படுவதாக தீர்மானிக்கப்பெற்றது. 1966-ஆம் ஆண்டு சோர்பின் அரசானது இம் மன்றத்தை மற்றைய பாலத்தீனிய விடுதலை அமைப்புகளுடன் சேர்த்துத் தடைசெய்தது. ஆனால் மற்றைய பகுதிகளிலிருந்த இதன் கிளைகள் தொடர்ந்தும் இயங்கி வந்தன.

செருசலத்தில் முகாமையாக அமைக்கப்பட்டிருந்த இம் மன்றம் 1970-இல் 'பெய்ரூட்'டுக்கு மாற்றப்பெற்றது. 'துபாய் (Dubai)-இலிருந்து 'மொரோக்கோ'வரை கிளைகளைக் கொண்டுள்ள இம் மன்றம் திறமையும் துணிவுமுள்ள இசாம்பத் - கல் - காடி (Isambd-ol-Hadi) அவர்களைத் தலைவராகக் கொண்டு இயங்கி வருகிறது. இவர் 1968-இல் இசுரேலியர்களினால் சிறை வைக்கப்பட்டுப் பின் நிலையாக நாடு கடத்தப்பட்டவராவார். பாலத்தீனிய மக்களின் வாழ்க்கையில் அரசியலிலிருந்து பண்பாடுவரை அனைத்து நிலைகளிலும், கூடுதலாக ஏதிலிகள் கொட்டடிகளிலுள்ள மக்களுக்குத் தொண்டு செய்வதிலும், போராட்டத்திற்கு வேண்டிய மூலப்பொருள்களை வழங்குவதிலும் இவ்வமைப்பு முகாமையான கவனம் செலுத்தி வருகிறது. 1968-இல் தான் முதன் முதலில் பெண்களுக்கானப் படைப்பயிற்சியை விரிவாக்கி இப்பொழுது உலகத்திலேயே முதல் தரமான பெண்படைஞரை உருவாக்கியுள்ளார்கள். அல்பட்டா (Al-Fateh) இயக்கத்தைச் சேர்ந்த 21 அகவை 'சாடியா அபுகசலே' (Shadia Abu Gohazo-leh) என்ற பெண், கொரில்லாப் போராட்டத்தில் இறந்த முதல் பெண், போராளியாக விளங்குகிறார்.

பாலத்தீனிய குமுகத்தில் பாலத்தீனிய விடுதலை இயக்கத்தினதும், மற்றைய கருவிப் போராட்ட இயக்கங்களினதும் எழுச்சி பாலத்தீனிய பெண்களின் நடுவில் குமுக, பொருளியல், அரசியல்

Scanned with CamScanner

வகையில் அஞ்சத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எடுத்துக் காட்டாக, பாலத்தீனிய விடுதலை இயக்கத்தின் பெரிய இயக்க மான (Al Fateh)-இன் பெண்கள் பகுதியில் 1969-ஆம் ஆண்டு 'சமீட்'—பணித் தளங்களில் 61% பெண்கள் பணியாட்களாகவும், 27% ஆளுமையிலும் இருந்தனர். பாலத்தீனிய செம்பிறைக் கழகத்தில் (Palastinc Red Cresecnt Society) 85% பெண்களாகக் காணப்படுகின்றனர். மேலும் பாலத்தீனிய ஒன்றுபட்ட அலுவகத்தில் 24 விழுக்காட்டினரும் பாலத்தீனிய திட்டமிடல் நிறுவனத்தில் 36 விழுக்காட்டினரும், பாலத்தீனிய ஆராய்ச்சி நிறுவனத்தில் 46 5 விழுக்காட்டினரும் பெண்களாகக் காணப் படுகின்றனர்.

இந்தக் காலகட்டத்தில் (GUPW) பாலத்தீனியப் பெண்கள் பொதுமன்றம் விரைவாக இயங்கும் நிலையமாகச் செயல்பட்டது. இந்தப் பெண்கள் இயக்கம் பெண் விடுதலைக்கான முயற்சிகளில் மட்டும் ஈடுபடாது சிறு பிள்ளைகளுக்கான ஒழுங்குபார்ப்பு (பராமரிப்பு) நிலையங்களையும், சிறுவர்களுக்கான பாடசாலைகளையும், தொழிற்கல்வி நிலையங்களையும், பணித்தளங்களையும் நடத்தி வந்தனர். பாலத்தீனியப் பெண்கள் பொதுமன்ற அமைப்பின் மருத்துவப் பயன்பாடு, செவிலிகள், பயிற்றுவித்தல், கல்வி, பொது வேலை, பொதுமக்கள் பாதுகாப்புப் படைப் பயிற்சி போன்ற துறைகளில் போராளிகளுக்குப் பயிற்சியளித்தும் வந்தனர்.

பாலத்தீனியப் பெண்கள் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்வதன்மூலம் மற்றைய அரபு அல்லது உலக நாடுகளைப் போலல்லாது குமுக, பொருளியல், அரசியல் வகையில் அதிகளவு விடுதலை அடைந்து வருகிறார்கள். இனப்பிரிவாளர்களையும், (இனவாதிகளையும்) பால்—வகையில் பேதப்படுத்துபவர்களை யும், நடுவண் கிழக்கிலுள்ள அனைத்ததிகாரத் தரகு முதலாளிகளை யும், 'சியோனிசவாதி'களையும் அடித்து விரட்டித் தமது சொந்த நிலமான பாலத்தீனத்தை மீட்பதன் மூலமே, முழுமையான விடுதலை அடையலாம் என்பதில் பாலத்தீனியப் பெண்கள் முழு உறுதியுடையவர்களாக இருக்கின்றார்கள்.

வெவ்வேறு அரபு நாடுகளில் காணப்படும் பெண்களுக்கு எதிரான அடக்குமுறைச் சட்டங்களைப் பற்றியும், கொடுமைகளைப் பற்றியும், அங்கேயுள்ள பெண்களின் நிலை பற்றியும் இசுரேலியத் தொழிலாளர் வகுப்பும், இசுரேலிய—பிரித்தானியப் பொதுமக்கள் நல்லுறவு அமைச்சும் அண்மையில் துண்டு அறிக்கைகளை வெளியிட்டிருந்தன. இதில் பாலத்தீனப் பெண்களைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. மாறாக அரபுநாட்டுப் பெண்களின் விடுதலைக்கு மட்டுமல்லாது உலகநாடுகளிலுள்ள பெண்களின் விடுதலைக்கே பாலத்தீனியப் பெண்கள் ஒளியேற்றுவார்கள், என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

பாலத்தீனியப் பெண்கள், விடுதலைப் போராட்டத்தில் முகாமையான—வலுமிக்க பங்களிப்பை வழங்கி வருகிறார்கள் என்பதில்

Scanned with CamScanner

எந்தவகை ஐயமும் இல்லை. வரலாறு, அவர்கள் அடையப் போகின்ற அவர்களுடைய வீரச்செயல்களை (சாதனைகளை) உறுதி யாக நமக்குக் காட்டும். ஆனல் இங்குக் குறிப்பிட்டதை விட அவர்களுடைய உண்மையான செயல்முடிப்புகள் (சாதனைகள்) அதிகம் என்பதை நாம் உணரவேண்டும்.

1948-ஆம் ஆண்டுக்கு முன்பு அராபிய குமுகாயமானது பழமை வழக்காடலிலும், குல வழக்கங்களிலும் ஊறிக்கிடந்தது. பாலத்தீனிய குமுகத்தில் ஒரு பகுதியினராகிய பெண்கள் புரட்சி யில் பங்கு பற்றியதன் மூலம் பழமை வழக்காடும் வழக்கங்களை மாற்றுவதில் வெற்றி கண்டுள்ளார்கள். வரலாற்றில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் எவ்வகை அணியமோ, நேரமோ இல்லாமல் போராட்டங்களில் பாலத்தீனியப் பெண்களைப் பங்கு பற்ற வைக்கின்றன. தமது நாட்டு நலனுக்கான போராட்டத்தில், தமது குடும்பத்தினதும், ஆண் வகுப்பினதும் அடிமை விலங்கை உடைத்துக் கொண்டுத் துணிவுடன் போராட்டத்தில் பங்கு பெற்று வருகிறார்கள்.

பாலத்தீன விடுதலை இயக்கம் 1947 முதல் 67 வரை காலப் பகுதியில் தனது ஆற்றலினை வெளிக்காட்டாமல் பல போராளி களை உருவாக்குவதில் ஈடுபட்டது. இந்தக் காலகட்டத்தில் உருவாகிய ஒவ்வொரு போராளியும் 1948-ஆம் ஆண்டுக்குப் பிறகே பிறந்தவர்களாவர். இவர்கள் யாரும் பாலத்தீனத்தைக் கண்ணால் பார்த்தவர்களாக இல்லை. ஆனல், பாலத்தீனத்தை மீட்பதற்காக உயிரைக்கூடக் கொடுக்கவும் அணியமாக இருக் கிறார்கள். ஏதிலிகள் கொட்டடிகளிலேயே இப் பாலத்தீனப் போராளிகள் உருவாகுகிறார்கள். இந்த ஏதிலிகள் கொட்டடிக ளிலே இருக்கின்ற பெண்கள் தங்களின் கணவர்கள் போராட் டங்களில் ஈடுபடும் அதே நேரம், தங்கள் பிள்ளைகளைப் பேணுவ திலும் குடும்பத்தைக் கட்டி வளர்ப்பதிலும் தனித்து ஈடுபடு கிறார்கள். இவ் இரக்கத்திற்குரிய சூழ்நிலைகளிலும் பாலத்தீனியப் பெண்கள் உறுதியுடனும், பொறுமையுடனும் புதிய குமுகாய மொன்றை, தங்களது தாய்நாட்டை—மீட்கும் தூய (புனிதப்) போராட்டத்திற்கு அணியப்படுத்தி வருகின்றார்கள். இப்படியான சூழ்நிலைகள் பாலத்தீனியப் பெண்களை அதிகளவு விரைவுடன் பெண்விடுதலையில், மற்றைய அரபுநாடுகளை விட முன்னேறுவ தற்கு வழி வகுக்கின்றன.

இப்படியான பாலத்தீனப் பெண்களினது போராட்ட வழி முறைகள் 'சியோனிசவாதி'களை முறியடிப்பது மட்டுமல்லாது முழு அரபு நாடுகளிலுமுள்ள பெண் அடிமை முறைக்கே முற்றுப்புள்ளி வைக்கும் என முழுதாக நம்பலாம்.

— நன்றி 'விடியல், அக்தோபர் 84'

நாடு தனியாகும்

— சி. இறையரசன்

செந்தமிழின் சிறுபகையாம் இந்திமொழி, ஆட்சிச்
செருக்குடனே வல்லாண்மை பெற்றுவரும் நேரம்!
எந்தமிழர் எல்லோரும் இணைந்தொன்றாய் நின்றே
எதிர்த்தொழிக்கச் சூலெடுத்தல் இன்றுமுதல் வேலை!

அலுவலகப் பணியாளர் அரைநேரம் இந்தி
அகத்தியமாய்க் கற்கவென அரசாணை இட்டார்.
பலமொழிவாழ் இந்நாட்டில் இந்திமொழி மட்டும்
படர்ந்தொளிரச் செய்கின்ற வல்லாண்மை நன்றோ?

ஒருமைப்பா டென்கின்ற ஓரினிக்கும் சொல்லால்
ஒருமொழியே அரசோச்சப் பலமொழியும் தாழ்ந்தால்
பெருமைநிறை பலமொழிகள் பேசுமின மாந்தர்
பின்னடைந்து தொழும்பரெனப் பேதலிக்க நேரும்!

கோடானு கோடியென அரசுப்பணம் கொட்டிக்
குறைமொழிக்கு நல்லூட்டம் ஊட்டுகின்றார் நாளும்!
தேடாது கிடைத்ததமிழ்ச் செல்வத்தைத் தேய்த்துத்
திராவிடத்தின் தனிமாண்பை அழித்திடயிவ் வேலை!

செந்தழலில் மாய்ந்தசின்னச் சாமியொடு சேர்ந்து
செத்தொழிந்த எட்டுப்பேர் பேரீகத் தாலே
இந்திவரும் விரைவுகுறைந் துளதன்றி மெய்யாய்
எத்துறையும் தவறாமல் மறைந்துவரக் கண்டோம்!

இந்தியாவில் நாமிணைந்து வாழ்கின்ற கூட்டை
இந்தியத்தை ஆள்வோர்கள் மதிப்பதுண்மை என்றால்
இந்திமட்டும் ஆட்சிமொழி எனுங்கொடிய போக்கை
இன்றெழித்தே எம்மொழிக்கும் சமந்தருதல் நன்மை!

வல்லாண்மை ஒன்றாலே வளர்த்துவிட எண்ணி
வாலாட்டம் செய்திட்டால் வண்டமிழர் நாடு
நல்லாண்மை கொண்டெதிர்க்கும், நாடுதனி யாகும்!
நல்லெண்ணத் துடன்இன்றே நாமிதனைச் சொல்வோம்!

Scanned with CamScanner

தமிழீழத்தை அமைக்க அனைத்துத் தேசச் சட்டம் தடையாக இருக்கிறதா?

— மலர்மாறன்

ஒரு நாடும், இன்னொரு நாடும் சண்டையிட்டுக்கொள்ளும் போது பகைவர்களின் படைவீரர்களைப் போர்க் குற்றவாளிகளாகப் பிடித்துவிட்டால், அவர்களுக்குத் தீங்கு இழைப்பதோ அல்லது அவர்களைக் கொல்வதோ கூடாது. அப்படி ஏதாவது தீங்கிழைத்தால் அஃது அனைத்துத் தேசச் சட்டப்படி குற்றமாகும்.

எதிரி நாட்டு மக்களில் தங்களுக்குத் தீங்கு இழைக்காதவர்களைக் கொல்லுவதோ அல்லது தாக்குவதோ அனைத்துத் தேசச் சட்டப்படி குற்றமாகும்.

தன்னுடன் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் எதிரி நாட்டு மக்களைக்கூட தாக்குவதோ, கொல்லுவதோ குற்றம் என்று அனைத்துத்தேசச் சட்டம் கூறுகின்றது.

இங்கே செயவர்த்தனா, ஈழத்தமிழர்களைத் தன்னாட்டு மக்கள் என்று கூறுகின்றார். அந்தக் கருவிகளேற்தாத ஈழத்தமிழர்களை ஆயிரக்கணக்கில் கொன்று குவித்துக் கொண்டிருக்கிறார். படைத் துறையின் உதவி கொண்டு, தமிழர்கள் வாழும் ஊர்களை மண்ணெண்ணெய் ஊற்றித் தீ வைக்கிறார்.

பகைவர்களைக்கூட கொல்வது குற்றம் என்று கூறுகின்றது, அனைத்துத்தேசச் சட்டம். தன்னாட்டு மக்களையே கொன்று குவித்துக் கொண்டு இருக்கிறார், செயவர்த்தனா, இஃது எவ்வளவு பெரிய குற்றம்?

இரண்டாவது உலகப்போரில் செர்மன் நாட்டின் மீது குண்டு போட்டுக் கொண்டிருந்த நேச நாடுகளின் படைவீரர்கள் சிலரை செர்மன் அதிகாரிகள் பிடித்துக் கொண்டு வந்தனர். வரும் வழியில் செர்மன் நாட்டுச் சிற்றூர் ஒன்றிலிருந்த செர்மன் மக்கள், அந்தப் போர்க்குற்றவாளிகளைக் கொன்றுவிட்டார்கள்.

நேச நாடுகள் செர்மனியைத் தோற்கடித்த பின்னர், போர்க் குற்றவாளிகளைக் கூட்டிக்கொண்டு சென்ற அந்த செர்மன் அதிகாரிகள் மீது உசாவல் நடந்தது. போர்க்குற்றவாளிகளைக் காப்பாற்றாது, அவர்கள் கொல்லப்படுவதற்கு உடந்தையாக இருந்ததாக அந்த அதிகாரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டது.

படிநிகராண்மை பெற்ற 'நியூரம்பர்க் வழக்கு' என்று கூறப் படுகின்ற வழக்கில் முகாமையான குற்றச்சாட்டுகளில் ஒன்றாக இது கருதப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்களில் 12 பேருக்குத் தூக்குத் தண்டனை கொடுக்கப்பட்டது; 3 பேருக்கு வாணாள் தண்டனை கொடுக்கப்பட்டது.

Scanned with CamScanner

போர்க்குற்றவாளிகளைக் கொல்லுபவர்களுக்கு உதவியாக இருந்தவர்களுக்கே அனைத்துத்தேசச் சட்டப்படி தூக்குத்தண்டனை கொடுக்கப்பட்டுள்ளது. செயவர்த்தனா, படையினரை ஏவிக் கருவியேந்தாத தன்னாட்டுத் தமிழ் மக்களையே பகைவர்கள் என்று கூறிக்கொண்டு, ஆயிரக்கணக்கில் கொன்று குவித்துக் கொண்டிருக்கிறார். இவருக்கு என்ன தண்டனை கொடுப்பது? யார் தண்டனை கொடுப்பது?

படுகொலைகள்பற்றி அனைத்துத்தேசச் சட்டம் கூறுவதுஎன்ன? இதோ முன்பு குறிப்பிட்ட அனைத்துத் தேசச் சட்டம் என்ற பொத்தகத்தில் பிரிவு xxxvii (War Crimes) பக்கம் 360, பத்தி—6.

'The United Nations conventions on Genocide makes the International crimes of acts aimed at destroying a national, ethnical or racial group as such punishable whether committed by rulers of states, public officials or private individuals.'

"ஒரு நாட்டின் ஆட்சியோ, அல்லது அரசு ஊழியர்களோ அல்லது தனிப்பட்டவர்களோ ஓர் இனத்தை அழிக்கும் நோக்கத் தோடு செய்யும் படு கொலைகள் அனைத்துத் தேசச் சட்டப்படி தண்டிக்கப்படத் தக்க குற்றமானதாக ஆக்கப்பட்டுள்ளது.'

செயவர்த்தனா தம் படைத்துறை, காவல்துறை, சிங்களக் குண்டர்கள் ஆகியோரை ஏவிவிட்டு ஈழத்தமிழ் இனத்தை அழித்து கொண்டிருக்கின்றார்.

அனைத்துத் தேசச் சட்டப்படி இஃது ஒரு மிகப் பெரிய குற்றமாகும். இக் குற்றங்களைச் செய்யும் செயவர்த்தனாவுக்குத் தண்டனை கொடுக்க யார் முன்வந்து இருக்கிறார்கள். ஒருவருமே இல்லையே......!

தண்டனை கொடுப்பது இருக்கட்டும்—மேலும் மேலும் தமிழர்கள் கொல்லப்படுவதைத் தடுக்கவாவது யாராவது நடவடிக்கை எடுத்துள்ளார்களா? இல்லையே?

அவரைத் தட்டிக் கேட்க யாருக்குமே துணிவு கிடையாதா?

செயவர்த்தனாவைத் தட்டிக் கேட்க வேறுயாரும் வரமாட்டார்கள். இந்திய, தமிழகத்திலே இருக்கும் நாம்தாம் தட்டிக் கேட்க வேண்டும்,

ஈழத்தமிழர்களின் உயிரையும், உடைமைகளையும் காப்பாற்ற அடுத்தவர்கள் வருவார்கள் என்று நம்பிக் கொண்டிருக்கும் நயப்பாசையை நாம் விட்டு விட வேண்டும்.

கட்சி வேற்றுமைகளை மறந்து தமிழர்கள் ஒன்றுபட வேண்டும்.

ஈழத்தமிழர்களைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட அனைத்துத் தேசச் சட்டம் குறுக்கே நிற்கவில்லை. நமது ஒற்றுமையில்லாத தன்மைதான் குறுக்கே நிற்கிறது.

Scanned with CamScanner

மொழியின் அடிப்படையில்தான் பெரும்பாலும் இனங்கள் அமைகின்றன. ஒவ்வோர் இனமும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அரசை நிறுவிக் கொள்கின்றது.

அரசின் கடமைகளை மூன்றாகப் பிரிக்கலாம்.

1. தன் மக்களைக் காப்பாற்றுவது.
2. தனது நாட்டைப் பாதுகாப்பது.
3. தன் மக்களை முன்னேற்றி வளமான நலமான உயர்ந்த வாழ்க்கையை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப் பொருளடிப்படையிலான குமுகநலத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துவது, ஆகியவையாகும்.

இந்த மூன்றில் முதல் இரண்டு கடமைகளாக, மக்களைக் காப்பாற்றுவதும், நாட்டைப் பாதுகாப்பதும் மிக மிக முகாமையான இன்றியமையாத கடமைகள் ஆகும். ஆட்சி செய்வோரின் உள்ளத்திலும் உணர்வுகளிலும் ஊறியிருக்கவேண்டிய கடமைகள் ஆகும், இவை.

அந்த இனத்தைச் சேர்ந்தவனே ஆட்சி செய்பவனாக இருந்தால், தன் மக்களையும் தன் நாட்டையும் காப்பாற்றும் எண்ணமும், உணர்வும் இயற்கையாகவே அவனிடம் அமைந்து விடுகின்றன.

ஆனால், அந்த இனத்தைச் சேராதவன் கையில் ஆட்சியிருந்தால் அந்த இனமக்களைக் காப்பாற்றும் எண்ணமும் முயற்சியும் இயற்கையாகவே அவனிடம் எழுவதில்லை.

இந்த உண்மையைத் தெளிவாக வெளிக்காட்டும் ஓர் எடுத்துக் காட்டாக விளங்குவதுதான் ஈழத்தமிழர் கொடுமைப்படுத்து வதைத் தடுத்து நிறுத்த எம். சி. இராமச்சந்திரனின் தமிழக அரசு நடவடிக்கை எடுக்காமல் இருக்கும் நிலையாகும்.

இந்தியக் கூட்டாட்சியிலே தமிழக அரசு ஓர் உறுப்பாகத் திகழ்கின்றது. உள்நாட்டிலே தமிழக மக்களையும் தமிழ் நாட்டையும் பாதுகாக்கும் அதிகாரத்தைத் தமிழக அரசு பெற்றுள்ளது. வெளிநாடுகளில் வாழும் தமிழ் இன மக்களைக் காப்பாற்றும் பொறுப்பு நடுவண் அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஈழத்திலே 35 இலக்கம் தமிழர்கள் சிங்கள அரசின் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டுப் படுகொலைகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

"தமிழர்கள் என் பகைவர்கள்—அவர்களைப் பூண்டோடு ஒழிப்பேன்" என்று இலங்கை அரசின் தலைவர் செயவர்த்தனா கொக்கரித்துக்கொண்டு படையினரை ஏவித் தமிழர்களைத் திட்டமிட்டுக் கொன்று கொண்டிருக்கின்றார்.

இலங்கையில் நடக்கும் இந்தத் தமிழ் இனப்படுகொலைகளைத் தடுத்து நிறுத்தி, ஈழத்தமிழர்களை விடுதலை அடையச் செய்திருக்க

வேண்டும், இந்திய அரசு! அந்தப் பொறுப்பை இந்திய அரசு தட்டிக் கழித்துக் கொண்டிட வருகின்றது.

இந்திய அரசு அதனிடம் கொடுக்கப்பட்டுள்ள அயல் நாட்டுத் தமிழ் மக்களைப் பாதுகாக்கும் கடமையை நிறைவேற்ற முற்படுவதுதான் சரியான நிலையாகும். ஏனெனில் சாகடிக்கப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் தமிழர்கள். தமிழ் இனத்தைக் காப்பதுதான் தமிழக அரசின் முதல் கடமை. இலங்கையிலே தமிழ் இனம் அழிக்கப்பட்டுக்கொண்டு இருக்கும் போது, அதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்காமல் தமிழக அரசு என்ற பெயரில் ஓர் அரசு இருக்க வேண்டிய தேவை இல்லை. தமிழ் மக்களைக் காப்பதைவிட வேறு முகாமையான வேலை தமிழக அரசுக்கு இல்லை.

ஓர் எடுத்துக்காட்டு மூலம் இதைப் பார்க்கலாம்.

கொலைக்காரன் ஒருவன் மாந்தன் ஒருவனைக் கொன்று, அவன் பொருளைக் கொள்ளையடிக்கத் திட்டமிட்டு எச்சரிக்கை விட்டிருக்கின்றான் என்று வைத்துக் கொள்வோம். கொள்ளைக் காரனின் அச் செயல்களை முறியடிக்க அம் மாந்தன் எப்படி நடந்து கொள்வான்?

உடனடியாகக் காவல்துறையினர்க்குச் செய்தி கொடுத்துப் பாதுகாப்புக் கோருவான். திருட்டுகளையும், கொலை கொள்ளைகளையும் தடுத்து, மக்களைப் பாதுகாக்கும் கடமை காவலர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளதால், காவல்துறைக்குச் செய்தி கொடுத்துப் பாதுகாப்புக் கோருகிறான்.

காவலர்கள் பாதுகாப்புக் கொடுக்காமல் ஏனோதானோ என்று இருந்து விட்டார்கள். கொள்ளைக்காரனும் அம் மாந்தனின் வீட்டில் புகுந்துவிட்டான். அந்தச் சூழ்நிலையில் அம் மாந்தன் என்ன செய்வான்?

காவல்துறையினரிடம்தான் முறையீடு கொடுத்துவிட்டோமே இனி அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள் என்று எண்ணிக்கொண்டு சும்மா இருக்க மாட்டான்.

தன்னைக் கொன்று, தன் பொருளைக் கவர முற்பட்டுள்ள அந்தக் கொள்ளைக்காரனை எதிர்த்துத் தானே போராடுவான். முடிந்தால், தன்னைக் கொல்ல வந்த அந்த கொலைக்காரனைத் தானே கொன்று விடுவான்.

'கொலைகளையும், கொள்ளைகளையும் தடுப்பதும், கொள்ளைக் காரர்களைப் பிடித்துத் தூக்கு மேடைக்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பதும் காவலர்களின் வேலையாகும். அப்படியிருக்க, 'அந்தக் கொள்ளைக்காரனை நீ ஏன் கொன்றாய்?' என்று எந்த அறிவுள்ள மாந்தனும் அவனிடம் கேட்க மாட்டான். எந்த அரசும் அவன் மாந்தன் ஒருவனைக் கொன்றுவிட்டான் என்று கூறி அவன் மீது வழக்கு தொடராது. அதற்கு மாறாக, கொள்ளைக்காரனை ஒழித்துக் கட்டிய வீரன் என்று புகழ்ந்து, பரிசுகளையும் கொடுப்பார்கள்.

தமிழக மாநில அரசை அம் மாந்தனாகவும், நடுவண் அரசைக் காவலர்களாகவும், சிங்கள அரசைக் கொள்ளைக்கார னாகவும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

இலங்கையிலே தமிழ் இனத்தைச் சிங்கள அரசு திட்டமிட்டு அழித்துக் கொண்டிருக்கின்றது. படுகொலைகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் அந்தத் தமிழர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்குமாறு நடுவண் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துவிட்டது, தமிழ்நாட்டு மாநில அரசு.

அதோடு தமிழக அரசின் கடமை முடிந்து விட்டதா?

கொள்ளைக்காரனை எதிர்த்துப் போரிட்டுக் கொன்று விட அம் மாந்தன் முயற்சி செய்வதைப் போல, தமிழக அரசும் ஈழத் தமிழர்களைக் காக்க, தானே நேரடி நடவடிக்கை எடுக்க வேண்டாமா?

தமிழக அரசு தானே வேகமாக மறைமுக நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கினால், தமிழக அரசின் இந்தத் துடிப்பையும், உணர்வுகளையும் புரிந்து கொண்டு, தமிழக அரசின் செயல்களைக் கண்டும் காணாதது போல இருந்து கொள்ளும், இந்திய அரசு. ஏனெனில், நடுவண் அரசு நடவடிக்கை எடுத்துத் தீர்க்க வேண்டிய சிக்கலான ஒரு நிலையை, அவர்களின் தலையீடுயின்றியே தீர்க்கப் பட்டுவிடும் நிலை ஏற்பட்டு விடுகின்றது அல்லவா?

மேலும் படைத்துறையை அனுப்புவதால் ஏற்படும் சிக்கல்கள் தொண்டர் படை அனுப்பும்போது ஏற்படுவதில்லை.

பொருளடிப்படையிலும், மக்கள் தொகையிலும் வறுமை யிலும், தமிழ்நாடு இலங்கையை விட நான்கு மடங்கு வலிவு மிக்கதாக இருக்கின்றது. இலங்கைப் படையை ஈழத்தமிழ்ப் பகுதிகளிலிருந்து விரட்டி விட்டுத் ஈழத்தமிழ் நாட்டை விடுதலை அடையச் செய்து தமிழர்களைக் காப்பாற்ற, தமிழக அரசின் தொண்டர் படையே போதுமானதாகும்.

1970-ஆம் ஆண்டு கிழக்கு வங்காளத்திலே வங்காள மக்கள் கொதித்தெழுந்தார்கள். நடுவண் அரசை எதிர்பார்த்துக் கொண்டிருக்கவில்லை. கிழக்கு வங்க அரசு, முக்திபாகினி தொண்டர் படையை அமைத்துக், கிழக்கு வங்கத்திற்குள் அதை அனுப்பி அங்கிருந்த முப்பதாயிரம் பாகித்தான் படைவீரர்களைத் தோற்கடித்துப் பங்களாதேச அரசை முதலில் நிறுவிட உதவியது மேற்கு வங்க மாநில அரசு.

மேற்கு வங்க மாநில அரசின் இந்தச் செயலை இந்தியக் கூட்டாட்சி அரசு தடுத்து நிறுத்தவில்லை; கண்டும், காணாதது போல இருந்து கொண்டது.

எண்ணெய் வள நாடுகளிலே மலையாளிகள் கொடுமைப் படுத்தப்படுகிறார்கள், என்றவுடன் கேரள அரசு உடனே நடவடிக்கை எடுத்தது. கேரள அமைச்சர் ஒருவர், நடுவண்

அரசு அதிகாரிகளைக் கூட்டிக்கொண்டு அந் நாடுகளுக்குச் சென்றார். அங்கே மலையாளிகளுக்கு ஏற்பட்ட கொடுமைகளைக் களைந் தெறிந்தார்.

இலங்கையிலே தமிழர்கள் ஆயிரக்கணக்கில் படுகொலைகள் செய்யப்படுகின்றனர். இலங்கைப படைத்துறையினரே கருவிகளேந்தாத தமிழ் மக்களைக் காக்கை குருவிகளைச் சுடுவது போன்று சுட்டுப் பொசுக்கிக் கொண்டு இருக்கின்றார்கள். இதைப் பார்த்துக் கொண்டு தமிழக அரசு தன்னால் ஒன்றும் செய்ய முடியாது. நடுவண் அரசுதான் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி கைவிரித்துக் கொண்டிருக்கின்றது.

இதற்குக் காரணம் என்ன? மேற்கு வங்க கேரள அரசுகளைப் போல தமிழக அரசும் ஏன் நடவடிக்கைகளில் இறங்க வில்லை?

மேற்கு வங்கத்திலே வங்க இனத்தைச் சேர்ந்தவர் முதலமைச்சராக இருந்தார். தன் இன மக்கள் கொடுமைப்படுத்தப்படுவதைக் கண்டவுடன் நடவடிக்கை எடுத்தார்.

கேரள மாநிலத்து முதலமைச்சர் ஒரு மலையாளி. ஆகவே மலையாளிகள் அயல் நாடுகளில் கொடுமைப்படுத்தப் படுவதைக் கேள்விப்பட்டவுடன் நடவடிக்கை எடுத்தார்.

ஆனால், தமிழக மாநிலத்திலே தமிழன் ஒருவன் முதல்அமைச்சராகவில்லை. எம்.சி. இராமச்சந்திரன் என்ற மலையாளி தமிழக முதல் அமைச்சராக இருக்கின்றார். ஈழத்திலே தமிழர்கள் கொடுமைப்படுத்தப்பட்டுப் படுகொலைகள் செய்யப்படுவதைப் பார்த்தும் அவருக்கு உணர்வும் ஏற்படவில்லை உணர்ச்சியும் வரவில்லை. ஈழத் தமிழர்களுக்காக வருந்துவது போன்று நடித்துக் கண்ணீரை வடித்துக்கொண்டிருந்தார். ஈழத்தமிழர்களைப் படுகொலைகள் செய்து கொண்டிருக்கும் சிங்கள அரசின் காட்டுவிலங்காண்டிச் செயல்களைத் தடுத்து நிறுத்தும்படி தமிழக அரசை அவர் பணிக்கவில்லை. ஆகவே தமிழக அரசு இலங்கை அரசை விட நான்கு மடங்கு வலிமை வாய்ந்ததாக இருந்தும், ஈழத்தமிழர்களைக் காப்பாற்றும் செயல்களில் ஈடுபட வில்லை.

இதுதானே உண்மையான காரணம் இது தவிர, ஈழத்தமிழர்களைக் காப்பாற்றும் நடவடிக்கைகளில், தமிழக அரசு இறங்காததற்கு வேறு என்ன காரணம் இருக்கிறது? ஈழத்திலே தமிழர்கள் ஆயிரக்கணக்கில் படுகொலைகள் செய்யபபட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். தமிழ்ப் பெண்கள் வீட்டின் உள்ளே இருந்தால் கூட வெளியே இழுத்து வரப்பட்டு, வன்முறையாகக் கற்பழிக்கப் பட்டுக் கொலைசெய்யப்படுகின்றார்களாம்.

இங்கே கருப்புச்சட்டை போட்டுக்கொண்டு இரங்கல் தெரிவிக்கின்றார்களாம்......!

ஏதும் செய்ய இயலாத எதிர்க்கட்சி வரிசையில் இருப்பவர்களா அவர்கள்?

இல்லை.........!

ஏவிவிட்டால் ஒரே கிழமையில் ஈழத்தமிழ் நாட்டை விடுதலை பெற்ற நாடாக ஆக்கவல்ல தமிழக அரசைக் கையில் வைத்திருக்கும் தமிழக ஆட்சியாளர்கள்தாம், கருப்புச்சட்டை அணிகிறார்களாம்........!

இவர்களின் உடன்பிறந்த பெண்களையும் தாயையும் மனைவியையும் நடுத்தெருவிலே சேலையை உரிந்து கற்பழிக்க யாராவது முற்பட்டால் கருப்புச்சட்டை அணிந்து, கண்டனம் தெரிவித்துக் கொண்டிருப்பார்களா?

(தொடரும்)

தவிர்க்கவியலா அச்சுப் பிழைகள்!

அன்புடையீர்! தென்மொழி, தமிழ்ச் சிட்டு, தமிழ் நிலம் — ஆகியவற்றுள், எவ்வளவு கவனித்தாலும், ஆங்காங்கே சில அச்சுப் பிழைகள் வந்துவிடுவதை உணர்கிறேன். இம் மூவிதழ்களும் கட்டாயம் வெளியிடப் பெற்றே ஆகல்வேண்டும் என்னும் கடமை நோக்கில் நடத்தப் பெறுவன என்பது அனைவரும் அறிந்ததே. இவற்றுக்குப் பெரும் முதலீடுகள் இல்லை. மிகுதியாக இல்லையென்றாலும் ஒரு கணிசமான அளவு தானும் இல்லை என்பதை நெருங்கிய சிலர் அறிவர். மிக எளிய முதலீட்டில், பற்பல இயக்கப்பணி, சொற்பொழிவுப்பணி, எழுத்துப்பணி என்னும் தீராத வினையழுத்தங்களுக் கிடையில், ஓரிரண்டு தொழிலாளர்களை வைத்துக்கொண்டு, ஒரு சிறிதும் ஓய்வில்லாத நிலையில், மிகுந்த இழப்புகளுக் கிடையில், இப்பணிகள் தட்டுத் தடுமாறி நடந்து வருகின்றன. நாமும் எம் இளைய மகன் பொழிலும் (அவர் ஆங்கிலம் படித்தவர்) தவிர, வேறு புலவரோ பேராசிரியரோ என ஒருவரும் துணையில்லாத நிலையில், நான் எழுதுவனவெல்லாம் அச்சுத் திருத்தவும், செப்பனிடவும் ஆன செயல்களில் சிற்சில பிழைகள் வந்தே விடுகின்றன. எம்மால் இதற்குமேல் என்ன செய்யமுடியும்? மிகுதியான சம்பளம் கொடுப்பின் திறமையாளர் சிலரைப் பணிக்கு அமர்த்தமுடியும்! ஆனால் பணத்திற்கு எங்கே போவது? வருகின்ற தொகை அச்சுக்கும் தாளுக்கும் வாடகைக்குமே பற்றும் பற்றாததுமாகி விடுகிறது சிறிய சம்பளத்தில் உழைக்க வருதற்கு யார் விரும்புகிறார்கள்? நம்மவர்கள் தொண்டர்களாக வர விருப்புகின்றனரே தவிர, ஈக மனப்பான்மையுடன் உழைப்பாளர்களாக, பணியாளர்களாக வர விரும்புவதில்லையே! என்ன செய்வது? பணி நிலை சீராகும் வரை, செயல் நிலை இப்படித்தான் இருக்கமுடியும். அன்பர்கள் பொறுத்துக் கொள்வார்களாக.

— ஆசிரியர்

அன்பர்கள் கவனிக்க...

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5-மணிக்குமேல், எழுதி இசைவுபெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கொள்கிறோம்.

— அமைச்சர்.

Scanned with CamScanner

தொடர்ச்சி - 2

விதியும் மதியும்

நாடக ஆசிரியர்: **அதியமான்**

நெடுஞ்சேர : கலைஞரே, தடையின்றிப் பேசலாம் நீர்.

குறிசொல் : (எழுந்து) மன்னவா, உங்கள் இருமருங்கிலும் அமர்ந்திருப்பவர் உங்களுடைய மக்கள் எனக் கருதுகிறேன்.

நெடுஞ்சேர : ஆம் (சுட்டிக்காட்டி) என் மகன் மூத்தவன் இவன் செங்குட்டுவன். இவன் இளையவன் இளங்கோ.

குறி சொல் : உங்கள் மூத்த மகன்தானே உங்களுக்குப்பின் இந் நாட்டுக்கு அரசன்!

இளங்கோ : (சட்டென்று எழுந்து) இதிலென்ன ஐயம்?

நெடுஞ்சேர : (சற்று சினத்தோடு) இளங்கோ உட்கார்; அவரென்ன மாற்றரசனின் ஒற்றரா? இல்லையே! குறிஞர் கேட்கும் கேள்விகளுக்கு விடை சொல்லவேண்டியதுதான். கலைஞரே நீர் பேசும்.

குறி சொல் : இளங்கன்று துள்ளும்; மாமன்னு! (இளங்கோவைச் சுட்டிக்காட்டி) இவர் இளையவர் என்று தெரிந்துகொண்டேன். அப்படியானல் செங்குட்டுவன் உங்களுடைய மூத்த மகன் வருங்கால அரசன்...

நெடுஞ்சேர : ஆமாம். எங்கள் தமிழகத்தில் தந்தைக்குப்பின் மூத்த மகனே முடியணியப்படுவான். இஃது எங்களின் வழி வழிப் பழக்கம்; (சிந்தித்து) ஆமாம், பெரும்பாலும் உலக மெங்கும் இதைத்தான் பின்பற்றுகிருர்கள்.

குறி சொல் : உங்கள் குடும்பப் பழக்கமும் அப்படித்தான் அல்லவா? சேரமன்னரே! இப்போது இதிலொரு மாற்றம்.

அமை : (எழுந்து) மாற்றமா? என்ன மாற்றம்?

குறி சொல் : பரபரப்பு வேண்டாம். அமைச்சரே உட்கார்ந்து அமைதியாய்க் கேளுங்கள். விதியின் வலிமையை. அரசே உங்களுடைய இரண்டு மக்களின் விதிகளைக் கணக்கிட்டுப் பார்த்ததில் அவர்களுடைய கணிய முறைப்படி இந்நாட்டுக்கு உங்களுக்குப்பின் உங்களின் இளைய மகனே முடியணியும் வாய்ப்பு உள்ளவர்.

இளங்கோ : (சினத்தோடு எழுந்து) நிறுத்தும் உம் சொல்லையும் எழுத்தையும்......

நெடுஞ்சேர : (குறுக்கிட்டு) இளங்கோ, உட்கார்; நீ பேசவேண்டாம் படைத்தலைவர் என்னவோ சொல்லப்போகிருர்.

படைத்தலை : மன்னா இவர் கலைஞர் அல்லர். பெரும் சூழ்ச்சிக்காரராகத் தெரிகிறார். மாற்றரசனின் ஒற்றராகக்கூட இருப்பரோ? நான் நினைக்கிறேன். நம்மை நிலை குலைய வைக்க இப்படிப் பேசுகிறார்.

அமை : (எழுந்து) ஆம் மன்னா, ஆம். இவரைக்கட்டி வையுங்கள். இவர்பேச்சில் நஞ்சு இருக்கிறது. குத்துவெட்டு கோட்டைக்குள் நடக்கத் தூண்டுகிறார். மறைந்திருந்து தாக்கும் குலத்தாரே இவர்.

நெடுஞ்சேர : அனைவரும் அமருங்கள். நான் பேசுகிறேன். கலைஞரே! இளையவன் அரசனாவது இயலாச்செயல், அவ்வாறு ஆக்கினால் அஃது அரசியல் முறைக்கு இழுக்கு. மூத்தவன் இராமன் காடேகா இளவல் பரதன் நாட்டைஆண்டான் என்பீர். அங்கு நடந்தது இணக்கிழத்தியர் சண்டை. இங்கு அங்ஙனம் இல்லை. விதியே என்றாலும் இளையவன் அரசனாவது இயலாச்செயல் எனினும் உம்மை ஒன்று கேட்கிறேன், எதை வைத்து இப்படிச் சுட்டுகிறீர்.

குறி சொல் : அப்படிக் கேளுங்கள் மன்னவரே! மாந்தர்களின் உடம்புகளில் உள்ள உறுப்புகள் அத்தனையும், அனைவருடைய வாழ்க்கையை முடிவுகட்டும் குறிப்பேடுகள். கையில் உள்ள கோடுகளைப் பார்ப்பது கைவரைக்கலை. முகம் நோக்கிக் கூறுவது முகக்குறி; கையால் தொட்டுப்பார்த்தால், தொடு குறி; தலையில் பார்ப்பது தலை எழுத்தை; இப்போது அந்த தலை எழுத்தைத்தான் சொன்னேன்!

இளங்கோ : எரிச்சலைக் கிளப்பாதீர். கொஞ்சங் கொஞ்சமாக நஞ்சைக் கக்கப் பார்க்காதீர். எங்கள் அரசமுறையை மாற்றுவதற்கு எவருடைய தலைஎழுத்தாலும் முடியாது. கலைஞரே, வீண் குழப்பத்தைச் செய்யத் துணியவேண்டா.

குறி சொல் : இளங்கோ நீர் இளங்கன்று, பேசுகிறீர். நான் சொன்ன சொல் எப்போதும் தப்பியது கிடையாது.

இளங்கோ : உம்மைப்போன்ற கலை பார்ப்பவர் பலர் கூடித்தான் இராமனுடைய தலையெழுத்தைப் பார்த்து நாள் குறித்தனர். அரசனாக்க எண்ணினர். அக் கலைஞரில் ஒருவராவது இராமன் காடு செல்வான்; மனைவியை இழப்பான், இராவணனோடு போர்புரிவான் என்று கூறவில்லை. உம் சொல்லை நம்பும் அறிவற்றவனுக்கு உம் சொல் சரி. எனக்கு அறிவிருக்கிறது. அண்ணன் இருக்க தம்பிக்கு முடியணிவது அரசமுறைக்கு இழுக்கு என அறிவுகூறும். விதி ஒன்றும் என் அறிவை ஏமாற்றமுடியாது.

குறி சொல் : உமக்கு அறிவு இருக்கலாம்; பல நூல்களைக் கற்று நீர் தேர்ந்தவராக இருக்கலாம். ஆனால் நான் கூறும்

விதியிடம் உம் அறிவு செல்லாக்காசு. எம்மிடம் மல்லாடாது உம் அறிவு.

இளங்கோ : சொல்லாடும் கலைஞரே கேளும்! அறிவிற்குப் பின்னால் நிகழப்போகும், நிகழ்ச்சி என்னவென்று அறியமுடியும். அறிவு ஒருவனுக்கு அழிவு வராமல் காக்கும் கருவி.

குறி சொல் : ஒப்புக்கொள்கிறேன் இளங்கோ; அறிவிற்கு வருங்கால நிகழ்ச்சியை அறியமுடியும்; ஆனால் அந்த நிகழ்ச்சியை மாற்ற விதி வேண்டும்.

இளங்கோ : வருங்காலத்தை உணர வலுவுள்ள அறிவிற்கு அந் நிகழ்ச்சியை ஆக்க, நீக்க வலுவில்லாமலா போகும்.

குறி சொல் : அறிவிற்கு வலு இருக்கலாம்; அந்த வலுவால் விதியை வெல்லுவாய் என்ற சொல் உம் தலையில் எழுதியிருக்க வேண்டும் இளங்கோ.

இளங்கோ : மாந்தன் ஒருவனுடைய விதி இப்படித்தான் இருக்கும் என்று கூறுவது எப்போது? ஒருவனுடைய இறப்பிற்குப் பின்னா? அல்லது முன்னா?

குறி சொல் : என்னைப் பொறுத்தவரை விதியின் முடிவை முன்னாலேயே கூறிவிடமுடியும்.

இளங்கோ : அந்த விதியின் முடிவைக் கண்டுகொள்ள நீர் பயன்படுத்திய ஆற்றல் அறிவா? அல்லது உம்முடைய விதியா ?

குறி சொல் : (சிந்தித்து) எம் அறிவே.

இளங்கோ : கலைஞரே, அப்படியானால் அந்த விதியின் முடிவைக் காண வலிமையுடைய அறிவிற்கு, விதியின் முடிவு தீமை தரும் என்றால் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும் என்பதை நீர் ஒப்புக்கொள்கிறீரா ?

குறி சொல் : எம்மால் ஒப்புக்கொள்ளமுடியாது. ஏன் தெரியுமா? எம் அறிவால் உம் விதி இப்படி இருக்கிறது எனக் கூற முடியுமே தவிர, அந்த விதியை மாற்ற எம் அறிவாலோ அல்லது உம் அறிவாலோ முடியாது.

இளங்கோ : கலைஞரே, திறனாய்வோடு பேசவேண்டும். எட்டிக் காய் கசக்கும், தின்றால் சாவு என்று அறிய அறிவிற்கு முடியும். ஆனால் அந்தச் சாவிலிருந்து நீங்க அதை உண்ணாமல் தவறு என்று தெளிய அறிவால் முடியாதா? நன்றாக இருக்கிறது உம் வழக்கு. இந்த வழக்கை இந்த அவையோர் ஒப்புக்கொள்வார்களா, முதலில்?

அவையோர் : முடியாது. ஒப்புக்கொள்ள முடியாது!

இளங்கோ : கலைஞரே நெருப்பு சுடும் என்பது நெருப்பின் இயல்பு அல்லவா?

குறி சொல் : ஆம் இளங்கோ.

இளங்கோ : அதனைத் தொட்டால் சுடும் என்பது.

குறி சொல் : அறிவின் கூற்று.

இளங்கோ : அதனால் அதனைத்தொடாமல் நீங்கச் செய்வது அறிவுதானே?

குறி சொல் : (தயங்கி) ஆ......மா......ம்!

இளங்கோ : சரி; மூத்தவன் செங்குட்டுவன் இருக்க இளையவன் இளங்கோ முடியணிவது உம் வழக்குப்படி விதி. அப்படித்தானே?

குறி சொல் : ஆம். இளங்கோ, ஆம்!

இளங்கோ : நெருப்பு சுடும் விலகு, என்று சொன்ன அறிவிற்கு என் அண்ணன் இருக்க தம்பி அரசிருப்பது அறமன்று! அது முறைகேடான செயல்; வழக்கத்திற்குப் புறம்பான நெறி, உம் குடிக்கு அஃது இழுக்கு, அறிவிற்கு அஃது ஒரு முடக்கம் அதனால் விலகு, அதைத் தொடாதே என்று எனக்குக் கூறுமா?

குறி சொல் : உம் அறிவுகூறும்: ஆனால் உம் விதி கூறவில்லையே!

இளங்கோ : எம் அறிவு கூறினால், அந்த உரிமையில் நான் கை வைக்க மாட்டேன் தெரியுமா?

குறி சொல் : அறிவு கூறினாலும் உம் விதி முந்தி வந்து இயங்கும்.

இளங்கோ : ஓ ஓ..கோ! குறி பார்ப்பவரே விதிக்கு இயக்கம் உண்டா?

குறி சொல் : உண்டே.

இளங்கோ : எப்போது ?

குறி சொல் : அறிவு விதியோடு எதிரும்போது!

இளங்கோ : அதன் முடிவு?

குறி சொல் : விதிக்கு வெற்றி, அறிவிற்குத் தோல்வி.

இளங்கோ : வியப்பு! கலைஞரே வியப்பு! போர்க்களத்தில் எதிரும் இரண்டு மறவர்களின் வெற்றி தோல்விகளைப் போரின் முடிவைத் தெரியாமலே சொல்லிவிட்டீர்.

குறிசொல் : ஆமாம். மாந்தருடைய வாழ்க்கைக் களத்தில் விதிக்கே வெற்றிபெறும் ஆற்றல் உண்டு. விதியை வென்ற வரலாறே முந்தியும் இல்லை, பிந்தியும் நடக்கப் போவதில்லை.

இளங்கோ : கலைஞரே, விதியை வெல்லமுடியாது என்ற தளர்ச்சியான எண்ணத்தால், அதனை வெல்ல முயற்சி செய்யவில்லை. எனவே விதிக்கு ஒரு போலியான வெளித்தோற்றமே நீர் சொல்வது. அறிவின் முயற்சியால் விதியைப் புறங்காண முடியும். ஆகவே அந்த விதியை வென்ற வரலாற்றை இம் மண்ணில் படைப்பதே என் முதல் வேலை. இந்த அரச உடையைக் கழற்றி விடுகிறேன். வேண்டாம், அவை இனி எனக்கு. குறிஞரே பாரும் (உடைகளைக் கழற்றிக் கொண்டே) என்னை ஒரு நொடிக்கு முன் நீர் இளவரசனைப் பார்த்தீர். இப்போது நான் துறவி. நீர் சொன்ன விதி என் காலடியில்' என் விதி என் அறிவால் வெல்லப்பட்டு விட்டது. என் தந்தைக்குப் பின் சேரநாட்டு அரசன் என் அண்ணன் செங்குட்டுவனே (போகிறான் வெளியில்) நான் செல்லுகிறேன்.

நெடுஞ்சேர. (சட்டென்று) காவலா, நிறுத்து அவனை!

காவல்: (வேல் கம்பு கொண்டு நிறுத்துகிறான்)

இளங்கோ: (திருப்பி நெடுஞ்சேரலாதனைப் பார்த்து) அப்பா; என்னைத் தடுத்து நிறுத்துவது அப்பாவின் அன்பா அல்லது அரசரின் ஆணையா ?

நெடுஞ்சேர: அப்பாவின் மீது அன்பு உனக்கு இருந்திருந்தால் எவரோ எதையோ சொன்னதற்கு நீ, துறவியாகத் துணிந்திருக்கமாட்டாய். அதனால் அப்பாவின் அன்பை மறந்த உன்னை இப்போது தடுப்பது அரசனுடைய ஆணை'

இளங்கோ: அரசனுடைய குடிமகனாக, நான் துறவியின் நிலையில் இருந்துகொண்டு பேசுகிறேன். அரசே! ஒருவனுடைய உரிமையில் அரசனுடைய ஆணை வல்லாண்மை செய்யமுடியாது.

அமைச்சர்: இளவரசே! அப்பா என்பதை மறந்து தப்பாகப் பேச வேண்டாம். தந்தை சொல் மிக்கதோர் மந்திரம் இல்லை.

—தொடரும்

“தென்மொழி”

சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல்நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம் :	15 உருபா	35 உருபா	40 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	8 ,,	18 ,,	25 ,,
தனியிதழ் :	1.25 ,,	3-00 ,,	4.00 ,,

Scanned with CamScanner

0: 1061 : மதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு, தென்னவன் எழுதியது. வணக்கம். கடந்த திங்கள் தென்மொழி படித்தோம். கலைஞர்க்கு எழுதிய மடல் கண்டோம். கலைஞர் என்ன செய்வார் என்பது இனிமேல்தான் தெரியும். தமிழன் எத்தனை ஆண்டுகள் தான் அடிமையாய் இருப்பது?

தமிழர்களில் பலர் 'நான் இந்தியன், நம் நாடு இந்தியா' என்று சொல்லிக்கொண்டு முட்டாள்களாகவே இருக்கின்றனர் என்பதை நினைக்கும்போது வருத்தமாக உள்ளது. கலைஞர்க்கு எழுதியமடலில் தங்களைத் தாங்களே இழிவுபடுத்திக் கொண்டதாகத் தெரிகிறது.

தங்களை ஒரு தலைவராகவே நினைக்கிறோம். தங்கள் காலத்திலேயே தனித்தமிழ்நாடு காணத் துடிக்கிறோம். இந்தியாவில் உள்ள தேசிய இனங்களின் விடுதலை முயற்சியைப் பாராட்டி வளர்க்க வேண்டும். முடிவில் எல்லாத் தேசிய இனங்களும் சேர்ந்து தில்லியை எதிர்த்துப் போராட வேண்டும். 'தமிழ்நிலம்' தொடர்ந்து கிழமை தோறும் வர முயற்சி எடுக்க வேண்டிக் கொள்கிறேன். 'தென்மொழி' முன்புபோல அரசு நூலகங்களில் வர முயற்சி எடுத்துக் கொள்வது நல்லது என்று எண்ணுகிறேன். என்னைப் போன்றவர்களின் ஆதரவு என்றும் தென்மொழி, 'தமிழ் நிலத்'துக்கு உண்டு. வணக்கம். அன்புநிறை.

— கு. தென்னவன், கரம்பக்குடி

0: 1062 : அருந்தமிழ்ப் பாவலரேறு ஐயா அவர்களே!

வணக்கம். சுவடி 21, ஓலை 3-இன் ஆசிரியவுரையைப் படித்தேன். இதுகாறும் தங்கள் சொல்லுக்கும் செயலுக்கும் மதிப்புக்கொடாத கலைஞர் அவர்கள், இன்று, இந்த இறுதி வேண்டுகோளுக்கு, மதிப்புக்கொடுப்பார் என்று நினைக்கிறீர்களா! எவ்வாறேனும் முதல்வராகிவிட வேண்டுமென்பதிலே தமது தன்மானத்தை இழந்துகூட பேசிப் பார்த்தும் பலனில்லை. அத்தகைய தமிழினக் காவலருக்குத்(!) தாங்கள் வேண்டுகோள் விடுத்து அவர் செவிமடுப்பதாவது! அவரின் கீழ் மட்டத் தொண்டன் இந்த நிலையிலுங்கூட அவரைப் பின்பற்றத் தயங்காது செல்கின்றான். இருப்பினும் கலைஞர் தங்களது வேண்டுகோளை ஏற்பார் என்றுவைத்துக்கொண்டாலும் அந்தத் தொண்டன் இந்தத் தமிழின மீட்சிப் போராட்டத்தில் குதிப்பான் என்பதில் என்ன உறுதி?

அவரை நயந்து பேசி நமது கழகத்திற்கு, நமது கழகம் முன் வைக்கும் போராட்டத்திற்குத் தலைமை தாங்க அழைப்பதை விடுத்து, ஆட்சியிலிருக்கும் நம் தனித்தமிழ் நாடும் அமைச்சர்களை அணுகி, நமது கழகத்திற்கு ஆதரவு தேட முயலுங்கள். எனினும் தங்கள் முடிவின்படி செயல்படுங்கள். என்றும் தங்கள் பின்வர நாங்கள் இருக்கிறோம். அன்புள்ள,

— அருள் நேயன், மும்முடிசாத்தான்.

0: 1063 : அன்புள்ள பாவலரேறு ஐயா அவர்கட்கு,

அன்புப், பணிவும் கனிந்த வணக்கம். தமிழ்.... தமிழ்...' என்று கதைத்துத் தம்முடைய நலத்திலேயே கவனம் கொண்டுள்ள எண்ணற்ற இதழ் ஆசிரியர்களின் நடுவிலே, தமிழுக்காக- தமிழினத்திற்காக உரிமைக்குரல் கொடுக்க. அப் பணிக்காகவே

Scanned with CamScanner

இன்னுயிர் காத்துவரும் தங்களுக்குத் தமிழ் இளைஞனாகிய எனது மனமார்ந்த பாராட்டுகள்! தங்கள் பணி சிறக்க எனது ஆற்றல் அனைத்தையும் செலவிட உறுதி பூண்டுள்ளேன். இங்கே, மதிப்பிற்குரிய வடிவேல் இராவணன் ஐயா அவர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டு உ.த.மு.க. பணியிலும் என்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளேன்.

— எசு.எ. சந்திரன், (க.இ)- திருநெல்வேலி.

0: 1064 : பேரன்புடையீர், வணக்கம். 'தமிழ்நிலம்' மிகவும் காலந்தாழ்ந்து வந்து கொண்டிருப்பது மிகவும் வருந்தற்குரியது. அதுவும் இன்றைய காலகட்டத்தில், இந்தியாவிற்குள்ளும் தமிழீழத்திலும் விடுதலைப் போராட்டங்கள் தீவிரமாக இருப்பதால், இவற்றைப்பற்றிய செய்திகள் நம்முடைய இளைஞர்களின் உணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்யவேண்டும். இந்தியாவின் அரசியல் போக்கு திசைமாறுகிறது. இப்பொழுது நடந்ததுதான் கடைசித் தேர்தலாக இருந்தாலும் இருக்கும். இனி இந்தியாவில் நடப்பது விடுதலைப் போராட்டங்களாகவே இருக்கும். ஆகவே இப்பொழுது 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு' ஆகியவற்றின் பணிகளை விட 'தமிழ்நில'த்தின் வினைவே எதிர்காலத் தமிழினத்திற்குத் தேவையாகும். தங்களன்புள்ள, — க. கண்ணன், கரடிப்பட்டி.

0: 1065 : 'தென்மொழி' ஆசிரியர் பாவலரேறு அவர்களுக்கு வணக்கம். 'தமிழால் என்ன முடியும்? என்று கேட்பவர்களுக்குத் "தமிழால் எல்லாம் முடியும் என்று துணிவுடன் நாங்கள் விடையளிக்கும் வகையில், இந்த இருபதாம் நூற்றாண்டுக்குத் தேவையான புதுமைத்துறைகள் (அறிவியல், மருத்துவம், தொழில்நுட்பம், விண்வெளி இயக்கம்) அனைத்தையும் குறித்த செய்திகளைத் தூய தமிழில் பாங்குற வழங்கிவரும் 'தென்மொழி' இதழ் மேலும், மேலும் வளர, என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'தென்மொழி' வளர்ச்சிக்காக, ஒரு சிறிய தொகையான உரு 15/ஐ, நன்கொடையாக அளிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன் நன்றி. இவண், கீதா உதயகுமார்-சென்னை-32

0: 1066 : அன்புள்ள அய்யா, வணக்கம்! உலகத்தமிழின முன்னேற்றம், ஒற்றுமை, விடுதலை இவற்றிற்காகத் தாங்கள் தொண்டாற்றுவது கண்டு பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன். தமிழ்நிலம் போன்ற இதழ்கள் தடைப்பட்டு வருவதாக அன்பர்களின் மடல்கள் தென்மொழியில் காணக்கிடைக்கின்றன.

உலகில் உயர்ந்திருந்த தமிழன் தாழ்ந்து விட்டான். ஆண்டவன் அடிமையாகி விட்டான்! தமிழ் நிலத்தில் செல்வச் செழிப்பில் திளைத்தவன் செல்வந்தேடி உலகெங்கும் பறந்தான். அங்குச் செல்வத்தோடு வாழ்ந்தாலும் தன்மொழி தன்இனம் தன் நாடு என்பதின்றி இருக்கின்றான். தமிழ்நாட்டில் இருப்பவனோ ..அரசியலில் முடியவில்லை. திரைப்படத்துறையில் இருப்பவனும் எங்கோ தமிழினத்தை இன்னும் அடிமையாக்கவே இருக்கின்றான். தமிழனுக்கு இனம், மொழி, நாடு என்ற பற்றே இல்லை. இல்லையென்றால் இத் தமிழ்நாட்டில் அறிஞர் மு. வ. தாய்மொழிப்பற்று இவர்களுக்கு

(தொடர்ச்சி 27-ஆம் பக்கம் பார்க்க)